விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 03 | ஞாயிற்றுக்கிழமை | (19.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 275

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## போரைத் தூண்டும் சக்திகளுக்கு பாடம்புகட்ட வேண்டும்

# சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதில் அரசாங்கத்திற்கு ஆர்வம் இல்லை!

### ஊடகவியலாளர்கள் மத்தியில் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்க சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அரசாங்கத்திற்கு ஆர்வம் இல்லை.**

**இதனையே அரசாங்கத்தின் செயற்பாடுகள் படம்பிடித்துக் காட்டுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.**

தென்னிலங்கை சுதந்திர ஊடகவியலாளர்கள் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துக் கூறுகையில்,

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினையை முடிபுக்கு கொண்டுவர இறுதித் தீர்வொன்றுக்குச் செல்லத் தயாராக' இல்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்த இடைக்காலத் தீர்வு உதவும் என்ற காரணத்தினாலேயே அதுபற்றி பேசுவதற்கு விடுதலைப் புலிகளும் முன்னைய அரசாங்கமும் இணக்கத்திற்கு வந்தன.

ஆனால் தற்பொழுது ஆட்சி பீடத்தில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்காது அதனை இழுத்தடித்து தாமதப்படுத்திவருகிறது.

இந் நிலையில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் சமாதானத்திற்கே முன்னுரிமை

### மாத்தறையில் ஜயலத்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் சமாதானத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டதென்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த இரண்டு தசாப்த காலமாக நடைபெற்று வந்த யுத்தத்தினால் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். அதே சமயம் 15 ஆயி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று புத்தளத்தில் சுட்டுக்கொலை!



(புத்தளம்)

புத்தளம் தில்லையடி இரத்மலயாய பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினரும் புத்தளம் மாவட்ட அமைப்பாளருமான தம்பிப்பிள்ளை சிவகுமாரன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றைய தினம் இரத்மலயாயவில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்து தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதனால் தலையில் படுகாயமடைந்த அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவம் அவரது இல்லத்தில் இருந்து நூறு மீற்றர் தூரத்திலேயே இடம்பெற்றிருக்கிறது.

இச் சம்பவத்தையடுத்து புத்தளத்தில் நேற்று பொலிஸார் வீதித்தடைகளைப் போட்டு மும்முரமான தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எதியோப்பியாவின் நிலைக்கு நாடு சென்றுகொண்டிருக்கிறது

### அரசின் மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆட்சியமைத்து 4 மாதங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அதன் செயற்பாடுகளால் நாடு எதியோப்பியாவின் நிலைக்குத் தள்ளப்படும் அபாயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக முன்னாள் பிரதிநிதியமைச்சரும், ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பந்துல குணவர்த்தன எச்சரித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமது திருமலை முகாம்களை மூன்று கி.மீ. பின்னகர்த்த வேண்டுமாம்

### பாதுகாப்பு அமைச்சு புலிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலையில் இருந்து 3 கிலோமீற்றர் பின்னோக்கி முகாம்களை நகர்த்துமாறு பாதுகாப்பு அமைச்சு விடுதலைப் புலிகளை கேட்டுள்ளது. சம்பூர் கடற்கரைப் பிரதேசத்திற்கு வர்த்தக நோக்கமாக வரும் கப்பல்களுக்கு இவை அச்சுறுத்தலாக அமையும் என இராணுவத் தரப்பு தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்கு அறிவித்துள்ளது.

சர்வதேச கடல் எல்லை திருகோணமலைக்கு அண்மையில் உள்ளது: எனவே திருகோணமலைக்கு அதியுயர் பாதுகாப்பு வழங்கவேண்டிய கடப்பாடு உள்ளது. இதுபற்றி பாதுகாப்பு கவுன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ். குடாநாட்டுக்கு வருகை தரும் இக் குழுவினர் குடாநாட்டில் உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பன குறித்து ஆராயவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தங்கியிருக்கும் சமயத்தில் பல்வேறு தரப்பினருடனும் அவர்கள் கலந்தாலோசனை நடத்துவர். (த)

## பொலிஸ்மா அதிபர் மன்னார் விஜயம்

(மன்னார்)

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா நேற்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மன்னாருக்கு விஜயம் செய்துள்ள அவர் மன்னார் மாவட்ட அரச அதிபரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்பில் அரச அதிபர் மன்னார் மாவட்டத்தில் தற்போது அதிகரித்துக் காணப்படும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பாகவும் இதனால் இலங்கை மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

இதேவேளை பொலிஸ்மா அதிபர் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப்பையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கை மக்கள் எதிர்கொள்ளும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுத் துறையை மறுசீரமைக்க இராணுவத் தரப்பில் கடும் பிரயத்தனம்

### நாளை கொழும்பில் மாநாடு

(கொழும்பு)

பாதுகாப்பு பிரிவின் புலனாய்வுத் துறையை மீளக் கட்டியெழுப்பும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் முதல் கட்டமாக இராணுவ புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றை ஒரே வலையமைப்பின் கீழ் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படைகளின் தலைமையக அதிகாரியாக பதவியேற்றுள்ள தயா சந்தகிரியின் ஆலோசனையின் பேரிலேயே இந்த மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை புலனாய்வுத்துறை அதிகாரிகளின் உயர்மட்ட மாநாடு ஒன்று அவசரமாக கூட்டப்படவுள்ளது. இம் மாநாட்டில் எடுக்கப்படும் புதிய தீர்மானங்கள் குறித்து உத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் அமெ. படைகள் தாக்குதல் 44 பேர் உயிரிழப்பு; 27 பேர் படுகாயம்

(ஈராக்)

**சன்னி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பலுஜா நகரில் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளதாகக் கருதப்படும் இடங்களை குறிவைத்து நேற்று முன்தினம் அமெரிக்கக் கூட்டணிப் படைகள் நடத்திய வான்வெளித் தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 27 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

குறிப்பாக அல்-கெய்டாவுடன் தொடர்புடைய அபு முஸாப் அல் - ஜர்காவி என்ற



அமைப்பின் தீவிரவாதிகளை ஒடுக்க அமொிக கப் படைகள் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 60 தீவிர வாதிகள் வரை கொல்லப்பட்டிருக் கலாம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் பலூஜா பொது மருத்துவ மனையின் தலைமை மருத்துவர் டாக்டர் அலி அவாட் கூறுகையில் தாக்குதல் காரணம்ாக குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்பட 44 பேரின் சடலங்கள் மருத்துவமனையில் உள்ள தாகவும் காயமடைந்த 27 பேர் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களுக்கு இரத்தம் தானம் செய்யுமாறு மசூதிகளில் உள்ள ஒலிபெருக்கி மூலம் அவ்வப் போது அறிவிப்பு வெளியாவதுடன் சில இடங்களில் இறந்தவர்களுக்காக பெரிய புதைகுழிகளை நகரவாசிகள் தோண்டி வருவ தாகவும கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் பலூஸா நகரிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறின. தற்போது மீண்டும் அங்கு தாக்குதலை தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வட- கிழக்கு மீள் நிர்மாணத்திற்கு டென்மார்க் அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

கடந்த இரு தசாப்த காலமாக இடம் பெற்றுவந்த யுத்த நடவடிக்கைகளினால் சேதமடைந்துள்ள வடக்கு கிழக்கை மீளவும் கட்டியெழுப்புவதற்கு டென்மார்க் அரசாங்கம் 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

சேதமடைந்த வடக்கு கிழக்கை மீளக்கட்டி யெழுப்புவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முதனிலை அமைப்புக்கள் முதன் முதலாக ஒன்றிணைந்து ஆரம்பிக்கவுள்ள முன்னோடிச் செயற் திட்டத்திற்காகவே டென்மார்க் அரசாங்கம் இந்த நிதியுதவியை வழங்கியுள்ளது.

மேற்படி முன்னோடித் திட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இம் முன்னோடிச் செயற் திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக மீளக் குடியமர்த்தல் நல்லிணக்கம், புனரமைப்பு புனர்வாழ்வு ஆகிய 4 அம்சத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# இந்திய- பங்களாதேஷ் இருதரப்பு பேச்சுகள் வெற்றி

இந்திய-பங்களாதேஷ் உள்துறை செயலர்கள் மட்டத்தில் நடந்த இருதரப்புப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள ஊருவல் தடுப்பு உட்பட முக்கிய விஷயங்களில் ஒத்துழைப்பு அளிக்க பங்களாதேஷ் உறுதியளித்துள்ளது.

இந்திய- பங்களாதேஷ் நாடுகளுக்கு கிடையில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, உள்துறை செயலர்கள் மட்டத்திலான பேச்சு இரண்டு நாட்களாக நடைபெற்றது பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடந்த பேச்சு வார்த்தையில் இந்திய உள்துறை செயலர் திரேந்திரசிங் தலைமையிலான 14 பேர் கலந்து கொண்டனர். அதேபோல் பங்களாதேஷ் சார்பில் உள்துறை செயலர் ஓமர் பருக் தலைமையில் 15 பேர் பங்கேற்றனர். இரண்டு நாள் நடந்த பேச்சு பயனுள்ள வகையில் முடிந்தது. இந்தியர்கள் விமானம் மற்றும் தரைவழிப் போக்குவரத்து மூலமாக பங்கதேஷ் வரவும், செல்லவும் விசாக்களை வழங்க அந்நாடு ஒப்புக்கொண்டது. விசா தொடர்பான கெடுபிடிகளை எளிமையாக்கவும் இருதரப்பிலும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதத் தடுப்பு ஊடுருவல் ஒழிப்பு போன்றவற்றுக்கு இருநாட்டு ஒத்துழைப்புடன் எல்லைப் பகுதியில் தீவிரரோந்து பணி மேற்கொள்ளவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. தவிர கைதிகளை பரஸ்பரம் ஒப்படைப்பது தொடர்பான ஒப்பந்தம், கிரிமினல் பிரச்சினைகளில் சட்டப்பூர்வ உதவிப் பரிமாற்றம் போன்றவை குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக பங்களாதேஷ் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். இந்திய - பங்களாதேஷ் உள்துறை செயலர்களின் அடுத்த கூட்டம் அடுத்த ஆண்டு ஜனவரியில் டில்லியில் நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-7)

# குண்டுடன் நுழைந்தார் பத்திரிகையாளர் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பரபரப்பு

(லண்டன்)

பத்திரிகை நிருபர் ஒருவர், வெடிகுண்டு தயாரிப்புப் பொருட்களுடன் பிரிட்டன் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

உலக பொலிஸ்காரன் அமெரிக்காவின் நம்பர் -1 நட்பு நாடு பிரிட்டன் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக் மீது தாக்குதல் நடத்தியதிலிருந்து பிரிட்டனின் பாதுகாப்புககு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் கண் பிரிட்டன் மீது திரும்பியுள்ளது. இதனால் பிரிட்டன் பாராளுமன்றம் அரசு முக்கிய அலுவலகங்கள் இராணியின் அரண்மனை உள்ளிட்ட இடங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இவ்வளவு செய்தும் பிரிட்டன் பாராளுமன்றத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. நரி வேட்டைக்கு பிரிட்டன் அரசு தடை விதித்ததை எதிர்த்து, நரி வேட்டையாளர்கள் ஐந்து பேர் அண்மையில் பாராளுமன்றத்தினுள் நுழைந்து பரபரப்பு ஏற்படுத்தினர். இதற்காக அவர்கள் போலி நுழைவுச் சீட்டை பயன்படுத்தினர்.

இச்சம்பவம் நடந்த 24 மணி நேரத்தில் மற்றொரு சம்பவம் நடந்துள்ளது. பிரிட்டனில் வெளியாகும் சன் பத்திரிகையின் நிருபர் பாதுகாப்பு அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வெடிகுண்டு தயாரிப்புக்குப் பயன்படும் வயர் மற்றும் டைனமோ ஆகியவற்றை பாராளுமன்றத்திற்குள் எளிதாக எடுத்துச் சென்றார். அவை போலிகள் என்பது வேறு விஷயம்.

பிரதமர் ரோனி பிளேயரின் உதவியாளரை சந்தித்து நான் மட்டும் தீவிரவாதியாக இருந்திருந்தால், கழிவறை அல்லது உணவகததில் வெடிகுண்டை வைத்து தகர்த்திருப்பேன் என்று நிரு பர் கூறினார். மறைந்து வைத்திருந்த வெடிகுண்டு பொருட்களை எடுத்துக் காட்டிய போது உதவியாளர் வாயடைத்துப் போனார்.

நரி வேட்டையாளர்கள் பாராளுமன்றத்திற்குள் நுழைந்ததால் ஏற்பட்ட பரபரப்பு ஓய்வதற்குள், இச்சம்பவம் நடந்தது பரபரப்பை இரட்டிப்பாக்கி உள்ளது. (ந-7)




# இரு பதவிகளில் ஒன்றைக் கைவிட முஷாரப் தீர்மானிக்க வில்லை

(அமெரிக்கா)

அதிபர் பதவி, ராணுவத் தலைவர் பதவி ஆகிய இரண்டில் ஒன்றைக் கைவிடுவது பற்றி பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் இன்னும் முடிவெடுக்கவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ராணுவத் தலைவர் பதவியை இந்த ஆண்டு இறுதிக்குள் கைவிடுவது என ஏற்கெனவே எடுத்த முடிவிலிருந்து முஷாரப் மாறவில்லை. எனினும் இந்த விஷயத்தில் அவர் இன்னும் முடிவெடுக்கவில்லை என்று அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரிச்சர் பௌச்சர் நிருபர்களிடம் கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

பல்வேறு அச்சுறுத்தல்களைக் குறிப்பாக பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ள நிலையில், இரு பதவியிலும் அவர் நீடிக்க வேண்டும். என்றே பாகிஸ்தான் அரசு விரும்புகிறது என அந்நாட்டு தகவல்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் ஏற்கெனவே தெளிவு படுத்தியிருக்கிறார். என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.(ந-7)

# பிரிக்கப்பட்ட குழந்தைகளில் ஒன்று மரணமடைந்தது

(ஜேர்மன்)

தலையொட்டிப் பிறந்த ஜேர்மன் நாட்டு குழந்தைகள் சந்திர சிகிச்சை மூலம் தனி யாக பிரிக்கப்பட்டபோது, ஒரு



குழந்தை இறந்துவிட்டது. மற்றொரு குழந்தை நல்ல நிலையில் உள்ளது.

ஜேர்மனியில் உள்ள லெம்கோ பகுதியை சேர்ந்த 13 மாத பெண் குழந்தைகள் லியா, டேபயா என்ற தலை ஒட்டி பிறந்த இந்த குழந்தைகளுக்கு அமெரிக்காவில் உள்ள ஜான் ஹாப்கின்ஸ் மருந்துவமனையில் 22 மணி நேர அறுவை சிகிச்சை நடைபெற்றது.

டாக்டர் பெஞ்சமினர் கார்சன் தலைமையில் டாக்டர்கள் தாதியர்கள், உதவியாளர்களென 100 பேர் கொண்ட குழுவினர் இந்த அறுவை சிகிச்சையை செய்து குழந்தைகளை தனியாகப் பரித்தனர்

மிகவும கடினமான இந்த அறுவை சிகிச்சையில் டேபயா, என்ற குழந்தை இறந்துவிட்டது. ஆனால் லியா என்ற குழந்தை நல்ல நிலையில் உள்ளது. சிகிச்சைக்கு பின்பு லியா கண், விழித்து பார்ப்பதாக டாக்டர் திபோரா ஆன் தெரிவித்துள்ளார்.


தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய வேண்டியிருக்கிறது. லியாவின் உடல் நல்லமுறையில் தேறிய பிறகு இந்த சிகிச்சையை மேற்கொள்ள டாக்டர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அதிகப்படியான இரத்த இழப்பாலும், இருதயம் சரியாக வேலை செய்யாததாலும் டேபயா இறந்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (ந-7)

# பற்றுறுதியோடு சவால்களை எதிர்கொண்டு வெல்வோம்

வி.பி.தனா
அரியாலை

நல்லதைச் செய்தாலும் - தீயதைச் செய்தாலும் மற்றவர்களின் விமர்சனத்திற்குட்படாதவர்கள் எவரும் இல்லை என்றே சொல்லலாம்.



இவ் விமர்சனப் பாங்கும் ஒரு வகையில் நல்லதுதான். ஏனெனில தீமைகளையும் கீழ்த்தரமான செயல்களையும் மேற்கொள்பவர்கள் திருந்தி வாழ உதவிபுரியும்.

ஆனால், தூரநோக்குடன் சமூகப்பணி ஆற்றுபவர்கள் மீது கூறப்படும் அவதூறான பழி சுமத்தல்கள் தவறானது ஆகும்.

### புறங்கூறலுக்குப் பயப்படுதல் கூடாது

அனேகருக்கு சமூகப்பணியாற்ற விருப்பம். ஆனால் மற்றவர்களின் புறம் கூறலுக்கு பயந்து அதனைச் செய்யாது இருக்கின்றார்கள்.

மற்றவர்களுக்குப் பயந்து அவர்களது புறங்கூறலுக்கு முகம் கொடுக்க முடியாது என்பதற்காக மானிடம் தழைக்கும் செயல்களை செய்யாமல் இருக்க முடியாது. அதனை செய்து தான் ஆகவேண்டும்.

சில சமூகத்திற்கு சில சமூகம் வளர்வதும் - மேம்படுவதும் அபத்தமாக அமைகின்றது. ஏனெனில் தமக்கு அடிமைகளாக இருப்பவர்கள் உயர்ந்து விட்டால் தமக்குப் பணிவிடை செய்யயாருமில்லை என்ற கொள்கையினால் காலம்காலமாக மற்றவர்களை அடிமைகளாக வைத்திருப்பவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் திட்டமிடடே செயற்படுகின்றார்கள்.

### எதிர் விமர்சனங்கள்

அடுதது தனி மனிதன் மீது கொண்ட காழப்புணர்வின் காரணமாகவும் எதிர் விமர்சனங்கள் பிறக்கின்றன. இங்கு அந்தத் தனி மனிதன் மக்கள் மனதில் தடம் பதித்து புகழ்பெற்று விடுவான் என்ற பயத்தினால் உருவாகின்றது.

எது எப்படி இருந்தாலும் சில ருடன் ஏன் சில சமூகத்துடன் முரணாக இருந்தென்றாலும் நாம் செய்யவேண்டிய காரியங்களை செய்துதான் ஆகவேண்டும். இதைத்தான் மிகவும் அழகாக அன்னைதிரேசா எது எப்படி ஆனாலும் செய்! **(Do It Anyway)** என்ற தலைப்பின் கீழ் தருகின்ற செய்தி வலுவற்றவர்களுக்கு வலுவூட்டுவனவாக அமைகின்றது.

## பரமபிதா காட்டியபாதை

'மனிதர்கள் பெரிதும் நேர்மையற்றவர்கள்
முன்பின் முரண்பாடானவர்கள்
சுயநலமுடையவர்கள்
எது எப்படியானாலும்
அவர்களை மன்னித்துவிடு!

★ ★ ★ ★

நீ பிறர் மீது பாசமாக இருந்தால்
மனிதர்களை அதனை சுய நலம்
அந்தரங்க உள்நோக்கம் கொண்டதாக எண்ணி உன்மீது
குற்றம் சுமத்துவார்கள்
எது எப்படியானாலும்
பிறர் மீது பாசமுடையவனாக இரு!

★ ★ ★ ★

"நீ வெற்றிக்குரியவனாக இருந்தால்
நீ போலி நண்பர்களையும்
உண்மையான எதிரிகளையும்
சம்பாதிப்பாய்
எது எப்படியானாலும்
வெற்றி கொள்"

★ ★ ★ ★

நீ நேர்மையாகவும் ஒளிவு மறைவு
இல்லாதவனாகவும் இருந்தால்
மனிதர்கள் உன்னை ஏமாற்றி விடலாம்
எது எப்படியானாலும்
நேர்மையானவனாகவும் கள்ளம் கபடமற்றவனாகவும் இரு!

★ ★ ★ ★

நீ பல வருடங்களாகக் கட்டியெழுப்பியதை
யாரோ ஒருவர் ஓர் இரவில்
அழித்துவிட முடியும்
எது எப்படியானாலும்
கட்டியெழுப்பு

★ ★ ★ ★

நீ மன அமைதியும் மகிழ்ச்சியுமடைந்தால்
மனிதர்கள் பொறாமைப்படுவார்கள்
எது எப்படியானாலும்
மகிழ்ச்சியாக இரு!

★ ★ ★ ★

இன்று நீ செய்யும் நன்மையை
மறுநாள் மனிதர்கள் மறந்து விடுவார்கள்
எது எப்படியானாலும்
நன்மை செய்!

★ ★ ★ ★

உன்னிடமுள்ள மிகச் சிறந்ததை
இவ்வுலகிற்குக் கொடு
அது என்றுமே போதுமானதாக
இல்லாமல் இருக்கலாம்
எது எப்படியானாலும்
நீ பெற்றுக் கொண்டுள்ள
மிகச் சிறந்ததை
இவ்வுலகிற்குக் கொடு!

★ ★ ★ ★

இறுதி ஆராய்வில்
நீ புரிந்து கொள்வாய்
அந்த ஆராய்வு
உனக்கும் ஆண்டவனுக்கும்
இடையிலானதாகும்
எது எப்படியானாலும்
அந்த ஆராய்வு
உனக்கும் மனிதர்களுக்கும்
இடையிலானதாக என்றுமே
இருந்ததில்லை! "

★ ★ ★ ★

எது எப்படியானாலும் நாம் மற்றவர்களின் வசை மொழிக்கும் - தீய வார்த்தைகளுக்கும் பயந்து முன்வைத்த காலை பின்நோக்கி வைக்காது முன்நோக்கி நகர்ந்து நற்பணியாற்றவேண்டும்.

"பகலைச் சார்ந்த நாம் அறிவுத் தெளிவோடு இருப்போம். நம்பிக்கையையும் அன்பையும் மார்புக் கவசமாகவும் மீட்புப் பெறுவோம் என்னும் எதிர் நோக்கை தலைச் சீராகவும் அணிந்து கொள்வோம்"

(1தெசலோ 5:8)

### நம்பிக்கையும் அன்பும் எம் கவசங்கள்

புனித பவுல் தெசலோனிக்க சபைக்கு இவ்வாறு நம்பிக்கையூட்டுவது எமக்கும் பொருந்தும். நம்பிக்கையையும் அன்பையும் மார்புக் கவசமாக அணிந்து எமது பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

அன்னை திரேசா இதைத்தான் செய்தார். அவர் எதிர் கொண்ட சவால்கள் அதிகம். அத்தனையும் எதிர்கொண்டு இறை பற்றுறுதியோடு வெற்றி கொண்டார். அவரது பணிசார் நிறுவனங்கள் இன்று பெருவிருட்சமாக உலகெங்கும் பரவி அநேகர் நன்மையடைகிறார்கள். இது எமக்கு சிறந்த எடுத்துக் காட்டு. நாம் சிறிய நன்மைத் தனமான செயல்களை என்றாலும் செய்யவேண்டும். அந்த தன்மைத்தனத்திற்கு எதிர்ப்பு வந்தாலும் அதனைச் செய்து முடிக்கவேண்டும். □

---

# வடக்கு – கிழக்கை உடனடியாக அபிவிருத்தி செய்ய வேண்டும்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)



நாடு அபிவிருத்தி செய்யப்படுவதானால் பாரபட்சமற்ற முறையில் சகல பிரதேசங்களிலும், அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

குறிப்பாக வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் துரித அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனுராத புரத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர், அம் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துப்பேசிய போதே இதனைக் கூறினார்.

கடந்தகால யுத்தத்தினால் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், அப்பிரதேசங்களில் உடனடியாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கூறினார்..

இதேவேளை, நாடுமுழுவதிலும் உள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் தகவல் நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டதரப்பினருக்கு தாம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (க-61)

## விஷமியின் விளையாட்டு

(துன்னாலை)

இளைஞர் ஒருவர் கரவெட்டி சாமியன் அரசடி வைரவர் கோவிலில் அமைந்துள்ள குடிநீர் கிணற்றின் வாளி, கயிறு, விளம்பரப்பலகை என்பவற்றை கழற்றி வீட்டிற்கு கொண்டுசென்றுள்ளார்.

அவற்றைப் பெறுவதற்காகச் சென்ற ஆலய பரிபாலனசபையினரை கத்தியைக் காட்டி பயமுறுத்தியுள்ளார்.

இவரின் செயற்பாட்டால் அப்பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் குடிநீர் பெறுவதற்கு இரண்டு நாட்களாக அல்லல் பட்டதாகத் தெரியவருகிறது. (ப-101)

## தரம் – 1 இல் மாணவர்கள் அனுமதி பெயர்ப் பட்டியல் பத்திரிகைகளில்

(கொழும்பு)

நாட்டில் உள்ள 50 பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கு தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் தொடர்பான தற்காலிக பெயர்ப்பட்டியலை முதல் தடவையாக பத்திரிகைகளில் வெளியிட கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

போலி ஆவணங்களைச் சமர்பித்து பிள்ளைகளை பிரபல பாடசாலைகளில் சேர்க்க முயற்சிப்போர் தொடர்பான விபரங்களைத் திரட்டுவதற்காகவே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் பி.எச்.டி.லியனகே தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் தரம் ஒன்றிற்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் முன்னர் அந்தந்தப் பாடசாலையின் அறிவித்தல் பலகையிலேயே பார்வைக்கு விடப்பட்டன.

இதனால், பலருக்கு இந்தப் பெயர்ப்பட்டியலைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போனதாகக் கூறப்படுகின்றது.

எனவே, இவற்றைப் பத்திரிகைகள் மூலமாக வெளியிடுவதற்கான நடவடிக்கையைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகின்றது.

அதன்படி, நாளை திங்கட்கிழமை முதல் இந்தப் பெயர்ப்பட்டியல் பத்திரிகைகள் மூலமாக வெளியாகும் என்றார். (க-61)

## பல்கலை கல்விசாரா ஊழியர் போராட்டம் முடிவுக்கு வரும்?

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு முடிவுகாணும் பொருட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுக்கள் பயனுள்ளதாக அமைந்திருந்ததென அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கூட்டுக்குழு தெரிவித்துள்ளது.

வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்மானம் எடுக்கப்படவில்லை.

ஆனாலும் இச் சந்திப்பில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்குத் தெரிவித்த பின்னரே வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்மானம் எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

---

## அஷ்ரப் ஞாபகார்த்த கட்டுரைப் போட்டி

(புத்தளம்)

சமாதானத்துக்கும் கல்வி அபிவிருத்திக்குமான அமைப்பு மறைந்த தலைவர் அஷ்ரப் ஞாபகார்த்தமாக கட்டுரைப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

தேசிய ரீதியான போட்டிக்காக சிறுபான்மையினத்தின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு இன ரீதியான கட்சிகள் இன்றியமையாததாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரவேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு எனும் தலைப்பில் 30 பக்கங்களில் (தாளின் ஒரு பக்கத்தில் மட்டும்) 4 ஆயிரத்து 500 சொற்களுக்கு உட்பட்டதான ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

அத்துடன், புத்தளம் மாவட்டத்திற்குட்பட்ட ரீதியில் நடாத்தப்படும் போட்டிக்காக 'தற்கால அரசியலில் அஷ்ரப்பின் பங்களிப்பு' எனும் தலைப்பில் 12 பக்கங்களில் (தாளின் ஒரு பக்கத்தில் மட்டும்) 4 ஆயிரத்து 500 சொற்களுக்கு உட்பட்டதான ஆக்கங்களை நாளை திங்கட்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-15)

## மான் இறைச்சி கடத்தியோருக்கு அபராதம்

(புத்தளம்)

புத்தளத்தில் 18 கிலோ மான் இறைச்சியைக் கடத்திய இரு நபர்களுக்கு நீதிமன்றம் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மேற்படி சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார், அவர்களை புத்தளம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது இவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், இறைச்சியைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்யவும் உத்தரவிடப்பட்டது.

மேலும, வில்பத்து வனவிலங்கு சரணாலயத்திற்குள் சட்ட விரோதமாக பிரவேசித்து மான் வேட்டையாடிய இரு நபர்களை தலா 1 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையில் விடுதலை செய்யவும் புத்தளம் மாவட்ட நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இலவங்குளப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இரு சந்தேக நபர்களும் வனவிலங்கு பரிபாலன அதிகாரிகளால் அண்மையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கூட்டுறவு விழா

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு விழா இன்று காலை 9.30 மணிக்கு சங்கத்தலைவர் சி.சிவ மகாராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும, வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

## புனரமைப்பு

கைதடி நுணாவில் குமரகுருபரன் பாலர் பாடசாலை சாவகச்சேரி பிரதேச சபையால் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலை கடந்த 2000 ஆம் ஆண்டு நடந்த யுத்த நடவடிக்கையினால் முற்றாகச் சேத மடைந்து காணப்பட்டமை தெரிந்ததே (க-127)

## முதியோர்தின போட்டிகள்

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவினால் முதியோர் தினத்தையொட்டி தென்மராட்சிப் பாடசாலைகளின் மாணவர்களிடையே எதிர்வரும் 26 ஆம் திகதி கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதேவேளை, தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முதியோர் தினம் மற்றும் சர்வதேச சிறுவர்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-47)

## தியாகி திலீபன் நினைவு தின போட்டி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் போட்டிகள் பாடசாலை மாணவர்களிடையே நடாத்துவதாக முன்னர் அறிவிக்கப்பட்ட கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான போட்டிகளில் முறையே கட்டுரை, கவிதைப்போட்டிகள் கல்வி வலயங்கள் அறிவித்த திகதிகளில் குறித்த வலயங்களில் அறிவிக்கப்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

அதேவேளை, மேற்பிரிவு மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகள் யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குக் குறித்த வலயங்கள் தெரிவுசெய்து அறிவிக்கும் பாடசாலைகளில் நடைபெறும்.

சகல போட்டிகளிலும் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி தியாகி திலீபன் நினைவு இறுதி நாள் நிகழ்வு நடைபெறும் இடங்களில் வைத்து வழங்கப்படும்.

வலய மட்டத்தில் நிகழ்வு நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.மாவட்டத் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலன் தெரிவித்துள்ளார். (ர)




மூத்த எழுத்தாளர் செ.நடராசாவின் நகைச் சுவைக் கதம்பம் நூல் வெளியீட்டு விழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையுரை நிகழ்த்துவதையும், அருகில் ஆய்வாளர் பா.மகாலிங்கம், ஆசிரியமணி எஸ்.பஞ்சாட்சரம், கவிஞர்துரையர், நூலாசிரியர் செ.நடராசா திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## ஐ.நா.கூட்டத்தொடரில் பங்கேற்க ஜனாதிபதி நியூயோர்க் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 59 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக்காலை நியூயோர்க் பயணமானார்.

பட்டினி, வறுமை ஒழிப்பு எனும் தொனிப் பொருளில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் அரச தலைவர்கள் மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி விசேட உரையாற்றவுள்ளார்.

இவைதவிர, உலகமயமாக்கல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சவால்கள் என்பன குறித்த கருத்தரங்கிலும் ஜனாதிபதி கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

நாளை மறுதினம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றுவதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று முறை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உரையாற்றிய பெருமையைப் பெறுவார்.

இந்தக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டபின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பும் வரை பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள ஏனைய அமைச்சுக்களான கல்வி அமைச்சுப் பொறுப்பை அமைச்சர் தினேஷ குணவர்த்தனவிடமும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுப் பொறுப்பை அமைச்சர் மங்கள சமரவீரவிடமும், இன நலலிணக்க அமைச்சுப பொறுப்பை அமைச்சர் டி.யூ குணசேகரவிடமும் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(க்-61)

## சமாதான முயற்சிகளில் மஹிந்த ரணிலின் பங்களிப்பு தேவையில்லை

### ஜனாதிபதியிடம் மக்கள் சமாதானமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான இணைத் தலைவர்களாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நியமிக்கவேண்டாம் என மக்கள் சமாதான மன்றம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் வண. மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

சரியான தீர்மானம் எடுக்க முடியாத பிரதிநிதிகளை சமாதான முயற்சிகளின் பொறுப்பாளர்களாக நியமிப்பதன் மூலம் சமாதான முயற்சிகளில் பின்னடைவு காணச்செய்ய அரசாங்கம் முயல்கின்றது.

கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தீர்மானம் எடுக்கக் கூடிய பிரதிநிதிகள் பங்குபற்றாததினால் பேச்சுவார்த்தைகள் இணக்கமின்றி நிறைவு பெற்றன, இந்த நிலைமை தொடர்ந்தும் இருக்கக் கூடாது.

எனவே, சமாதான முயற்சிகளுக்கான பொறுப்பினை நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே ஏற்கவேண்டும். அதற்கு இணைத் தலைமைகள் எதுவும் தேவையில்லை.

இதேவேளை சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்போம் என ஐக்கிய தேசியக் கட்சி தற்போது கூறிவருகின்றது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியதும் தனது ஆதரவை வழங்க மறுத்து விட்டால் அரசு என்ன செய்யும்?

எமது நாட்டில் முன்னர் எல்லாம் இவ்வாறு தான் எதிர்க்கட்சிகள் நடந்து கொண்டிந்தன. அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதாக எதிர்க்கட்சி கூறிவருமானால் தக்க சமயத்தில் அதில் இருந்து விலகி அரசுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்க முயற்சிக்கும்.

எனவே, சமாதான முயற்சிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கக் கூடிய வாய்ப்புக்களை எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார். (க)



மும்பையில் நடந்த விழா ஒன்றில் துணை ஜனாதிபதி ஷெகாவத் இந்திய கலாசாரத்தைப் பாதுகாக்க உழைத்த ராஜேந்திர ஷாவுக்கு விருது வழங்குகிறார்.

## பொடா சட்டத்தை மீளப்பெறக்கூடாது பிரதமரிடம் ஜெயலலிதா கோரிக்கை

(டில்லி)

பொடா சட்டத்தைத் திரும்பப்



பெறக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் நேரடியாக வலியுறுத்தியுள்ளார்.

கடந்த தி.மு.க. ஆட்சியின் போது டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் புதியவிருந்தினர் மாளிகை அமைக்க அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி அடிக்கல் நாட்டியிருந்தார்.

26 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட அந்த விருந்தினர் மாளிகையை நேற்று முன்தினம் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

பின்னர் பிரதமர் மன்மோகன் சிங்கை ஜெயலலிதா சந்தித்துப் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை அளித்தார்.

இதையடுத்துச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் பொடா சட்டத்தைத் திரும்பப் பெறும் முடிவை மறு பாிசீலனை செய்யுமாறு பிரதமரிடம் வலியுறுத்தியதாகக் கூறினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அ.தி.மு.க. அங்கம் வகித்ததில்லை எனக் கூறிய ஜெயலலிதா, பிரச்சினையின் அடிப்படையிலேயே அக் கூட்டணியை ஆத



ரிப்பதாகத் தெரிவித்தார்.

சந்தனக் கடத்தல் வீரப்பனை அதிரடிப் படையினர் விரைவில் பிடித்துவிடுவார்கள் என்றும் அவர் கூறினார். (து)

## இந்தியச் செய்திகள்

### உமாபாரதி தேர்தல் விதிகளை மீறுகிறாரா?

### பா.ஜ.கவுக்கு தேர்தல் ஆணையம் கடிதம்

மூவர்ண யாத்திரை மேற்கொண்டுள்ள உமாபாரதி மகாராஷ்ராவில் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக எழுந்துள்ள புகாருக்கு ஒரு வாரத்தில் பதிலளிக்க வேண்டுமென்று பா.ஜ.கவுக்குத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மகாராஷ்ராவில் சட்டமன்றத் தேர்தல் நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன. அங்கு கூட்டணி அமைத்துள்ள சிவசேனா 167 தொகுதிகளிலும், பா.ஜ.க 114 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. காங்கிரஸ் கட்சியும் வேட்பாளர் தேர்வில் மும்முரமாக உள்ளது.

இதனிடையே மூவர்ண யாத்திரை மேற்கொண்டிருக்கும் உமாபாரதி மகாராஷ்ராவில் தற்போது பயணம் செய்து வருகிறார். யாத்திரையின் போது உமாபாரதி தேர்தல் விதிகளை மீறி வருவதாகவும் அவரது யாத்திரைக்குத் தடைவிதிக்க வேண்டுமென்றும் மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் தேர்தல் ஆணையத்திடம் புகார் தெரிவித்திருந்தார்.

இந்தப் புகார் குறித்து இன்னுமொரு வாரத்துக்குள் பதிலளிக்க வேண்டுமென்று பா.ஜ.கவுக்கு தேர் தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. (து)

### சேது சமுத்திரத் திட்டத்தால் தமிழ்நாடு செழிக்கும்

(சென்னை)

சேது சமுத்திரத் திட்டத்தால் தமிழ் நாடு செழிககுமென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தி.மு.க.முப்பெரும் விழாவையொட்டி கோவை வா.உ..கி.பூங்கா மைதானத்தில் பல இலட்சம் பேர் பங்கேற்ற பிரமாண்டமான பொதுக கூட்டத்தில் பேசிய அவர், 140 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படுவதறகு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தான் காரணமென்றார்.

ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்திருந்த போது 1998 ஆம் ஆண்டு வெளியிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி செயல்திட்டத்தில் சேது சமுத்திரத் திட்டம் இடம் பெறவில்லையென்று அவர் தெரிவித்தார். இந்தத் திட்டத்தால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது என்று கருணாநிதி கூறினார். (து)



பேரறிஞர் அண்ணாவின் 96வது பிறந்தநாளையொட்டி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சென்னையிலுள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். அண்ணாவின் பிறந்த நாள் தமிழகம் மற்றும் புதுவையில் கொண்டாடப்பட்ட போது அவரது சிலைக்கு பல்வேறு தலைவர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# ஆபத்தில் உயிர்காக்கும்

இரத்தம் தக்க சமயத்தில் உயிர்காக்கும் உயிர்த்திரவம. கடுமையான காய்ச்சல் உட்பட வேறுபல வியாதிகளில், குருதியும் அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட திரவப் பகுதியும் மருந்தாகின்றன.

யச் செய்வ தற்கு உதவுகின்றன.

வைக்கோல் நிற திரவவிழையத்தில் பல உடற்றொழிற்பாட்டுக்கு அத்தியாவசியமான பொருட் கள் கரைந்து காணப்படுகின்றன..

இவை மொத்தமுமே குருதி எனப்படுகின்றது. ஒருவரது நிறை

**வாரீர்!வழங்குவீர்! உயிர்காக்கும் தானத்தை!**

**19.09.2004 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.00மணிவரை சேர் பொன். இராம நாதன் வீதியில் பல்கலைக்கழகம் முன்பாகவுள்ள, ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது. அனைவரும் வருகை தந்து இரத்த தானம் செய்வீர்**

வபத்துக்களினாலும், கட்டுக்கடங்காத தொற்று நோய்களினாலும் அலைக்கழிக்கப்படு கினற குடாநாட்டு மக்களுக்கு இரத்தம் நிறையவே தேவைப் படுகிறது.

மருந்துகள் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்படு கினறன. ஆங்கில மருத்துவ அறிவு கூட இறக்குமதியானதுதான்! குழாயகளும் ஊசிகளும் அவ் வாறே! ஆனால் நோயாளிகளும்.. இரத்தமும் இங்கிருந்து தான் பெறப்பட வேண்டும்.

## இரத்ததானத்தின் அவசியம்

இரத்தம் உடலின் ஏகவிநியோகஸ்தர்! உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் உணவு, ஒட்சிசன் பல்வேறுவகையான சுரப்புக்கள் என்பவற்றை விநியோகம் செய்யும் கழிவுகளை அகற்றும். இதற்காக உடலெங்கும் பரவிக் கிடக்கின்ற குருதிக் குழாய்களினூடு, இதயம் உந்தித்தள்ள இரத்தம் சுற்றி ஓடுகிறது.

இரத்தம் வெதுவெதுப்பான சிவப்புப் பாகுநிலை திரவமாக காட்சியளிக்கின்றது. காயங் கள ஏற்படுகிறபோது உடலிருந்து வெளியேறுகிற இரத்தத்தில் சிறிதளவை ஒரு கண்ணாடிக் குப்பியில் சேகரித்துப் பாருங்கள், சிறிது நேரத்தில் உறைந்து விடும். அதில் மேலே வைக்கோல நிற திரவப்பகுதியும் அடியில் சிகப்பு நிற திண்மப் பகுதியும் எஞ்சும்.

உண்மையில் இரத்தத்தில் செங்குழியங்கள் என்ற சிவப்பு நிறக கலங்கள் ஏராளமாகக் காணபடுகின்றன. இவையே இரத்தத்துக்கு சிவப்பு நிறத்தை அளிக் கினறன. இவைதான் நாம் சுவாசிக் கும் காற்றிலுள்ள ஒட்சிசனை உடலெங்கும் எடுத்துச்செல்கின் றன.

வெண்குழியங்கள் எனப்படுகிற நிறமற்ற கலங்கள் உட லின் பொலிஸ்காரர்கள். கிருமிக ளோடு போராடுவதும், உடலில் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஆதார மானவையும் இவையே. குருதிச் சிறு தட்டுக்கள் எனப்படுகின்ற தட்டுவடிவமான அங்கங்கள் குருதியை உறை

யில் 10வீதம் இரத்தம் அதாவது நங்கள் 50 கிலோ என்றால் அதில் 5 லீற்றர் இரத்தம்.

பலவேறு நோய்களில் குருதியின் அமைப்பு-கலங்கள் பாதிக்கப் படுகின்றன. பாதிப்புகள் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவை.

குறையத்தொடங்கும். சில வகைக் காய்ச்சல்கள் இரத்த உற்பத்திமையத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இரத்தக்காயங்கள் ஏற்படுகினறபோது வெளியேறத் தொடங்குகிற இரத்தம் சிறிது நேரத்தில் நின்று விடுமல்லவா அதற்கு காரணம் இந்த குருதிச் சிறுதட்டுக்கள்.

பிரித்தெடுக்கப்பட்ட குருதிச் சிறுதட்டுக்களை இரத்தக் குழாயகளுக்குள் செலுத்து வதன மூலம் நிலைமையை ஓரளவுக்கு கட்டுக்குள் கொண்டுவரலாம். ஆனால் பிரித்தெடுக்கப்பட்ட குருதிச் சிறு தட்டுக்கள் 5 நாட்கள் மட்டுமே சேமித்து வைக்கப்பட முடியும்.

இந்தநிலையில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு சராசரி யாக நான்கு அல்லது ஐந்து பிரித்தெடுப்புக் கள் தேவைப்படும். இதற்கு நான்கு அலலது ஐந்து பேரின் இரத்தம் தேவைப்படும். அதா வது 21/2 லீற்றர் இரத்தம்! இப்படி நாலைந்து நோயாளிகள் இருந்தால் 10லீ மேல் குருதி தேவைப்படும்! 20 பேர் இரத்தம் வழங்கவேண்டும்.

புண்ணியம் நிறைய உண்டு.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்களின் உடல் நிலை தகுதியாக இருக்க வேண்டும். 18-60 வயதிலுள்ள ஆண், பெண் இருபாலாரும் இரத்ததானம் செய்யலாம். குறிப்பிட்ட சில நோய்கள் தொற்றுறோய்கள், உடல்நிறை, உடல் இரத்தத்தில அளவு என பல விடயங்களை சீர தூக்கி பார்த்தே இரத் தம் சேகரிக்கப்படும். 50 கிலோ நிறைக்கு மேற்பட்டவர்கள் ஆகக கூடுதலாக 450 மி.லீ. இரத்தத் தினை எந்தவித பாதிப்புமில்லா மல் வழங்கமுடியும்.

இரத்ததானம் பற்றிய பயம் இனனும் இருக்கிறது. ஆதிகாலந் தொட்டே மனிதன் இரத்த வெளியேற்றத்தை மரணத்துடனேயே தொடர்பு படுத்தி வந்திருக்கின்றான். இரத்தம் இழப்பு மரண பயத்தை தருகிறது... இரத்தக்காட்சி அனே கருக்கு பயத்தைத் தருகின்றது.

அறியாமை மிக்க உணர்வுபூர்வமான மக்கள் இரத்தம் கொடுக்க வேண்டும் என்றவுடன் தயக்க மடைகிறார்கள். தங்கள் ஆரோககியம கெட்டுவிடும் என்று நினைக் கிறார்கள் இது தவறு.

இலட்சக்கணக்கானவர்கள் இரத்த தானம செய்திருக்கிறார் கள. இரத் தானம் ஒருவரை நோயா ளியாக்கியதில்லை. கொன்ற. தில்லை.

# இரத்த தானம்!

இந்த அபாயத்தருணத்தில் முழு இரத்தம் அல்லது இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட திரவ விழையம், செங்குழியங்கள் குருதிச் சிறுதட்டுக்கள் என எல் லாமே உயிர்காக்கும் மருந்தாக அமையும்.

**இரத்தம் வழங்குவோரின் தகுதிகளும் கவனத்தில் கொள்ள வேண்டியவையும்**

**வயது:** 18-60 வயது ஒருபொருட்டல்ல!
**பால்-** பெண்கள்இரத்தம்வழங்கத் தடையேதுமில்லை.
**இடைவெளி-**ஆண்கள் 4 மாதங்களுக்கு ஒருதடவை; பெணகள் 6மாதங்களுக்கு ஒருதடவை.
**நோய்கள்-**நாட்பட்ட நோய்கள் தொற்று நோய்கள் கர்ப்பம என பல தகவல்கள் ஆராயப்பட்டு மருத்துவத்தகுதிகாண் பரிசோதனை செய்யப்பட்டே உங்கள் இரத்தம் பெறப்படும்.
**நடத்தை-**பாலியல் துர்நடத்தை. போதைமருந்து பாவனை உள்ளவர் இரத்ததானத்துக்கு விலக்கப்பட்டவர்கள்

## இரத்தக்கசிவின் விளைவு

இனறு உலவுகிற அனேகமான காய்ச்சல்கள் ஒரு கட்டத்தில் குருதியின் அமைப்பை பாதிக் கச் செய்கின்றன. குருதிச் சிறு தட்டுக்கள குறைகின்ற போது இரத்தக்கசிவு அபாயம் ஏற்படு கிறது.

டெங்கு, வைரஸ் காய்ச்சல் களின் போது குருதிச் சிறுதட்டுப் பிரித்தெடுப்புக்கள் உயிர்காப்பன வாக அமைகின்றன. டெங்குக காய்ச்சலும் வைரஸ் காய்ச்சலும் பரவுகின்ற நேரங்களில் சிலரின் குருதியில் குருதிச்சிறுதட்டுகள்

இப்படியான சந்தர்ப்பங்களில் பணமோ பதவியோ கைகொடுப்பதில்லை. நல்ல உறவுகளும சுற்றமும் மனிதாபிமானமும் மாத்திரமே கைகொடுக்கும்.

காயங்கள், விபத்துக்கள், சத்திர சிகிச்சைகள், பிரசவங்கள என எல்லா நிகழ்வுகளிலும் இரத்தப்பெருக்கு அபாயம் இருபபத னால் இரத்தம் நிறையவே தேவைப்படும்.

## இரத்ததானம் எவரும் செய்யலாம்

இரத்தம் வழங்க யாரும் முன் வரலாம். இரத்த வங்கியில் உங் கள் இரத்தங்களை வைப்பிடலாம். ஆனால் வட்டியோ மாதம் மாதம் குலுக்கல் முறையில் பரிசுகளோ கிடையாது.

இரத்தம் ஊற்றெடுக்கிற திரவம். இரத்தத்தின் கூறுகள் சிறது காலமே வாழ்கின்றன. செங்குழியங்களின் வாழ்நாள் மூன்று மாதங்கள் மாத்திரமே! வெண்குழியங்களுக்கும் குருதிச்சிறு தட்டுக் களுக்கும் வாழ்நாள் நாட்கணக் கில். எனவே மூன்று மாதத்துக்கு முன் இருந்த இரத்தமல்ல இப்போது உங்களுள் இருப்பது.

பல்லைப் பிடுங்கினாற் போலவோ கண்ணினை இழந்தால் போலவோ அல்ல. இரத்தத்தை இழந்தால்அது தானே ஊறிக்கொள்ளும்.

இளைஞர் குழுக்கள் விளையாட்டுக்கழகங்கள் காலத்துக்குக காலம் குறித்த இடைவேளைகளில் வெவ்வேறு இடங்களில் இரத்த தான முகாம்களை நடாத்தலாம்.

இதைத்தவிர பொது நல அமைப்புகள் மதஸ்தாபனங்கள் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து காலத்துக்குக்காலம் நடாத்துகின்றன. தனிப்பட்ட முறையில் இரத்தவங்கியில் நேரடி யாகவே இரத்தத்தை வழங்க

**டாக்டர் அ. கிருஷ்ணேந்திரன் (MBBS)**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

விபத்துக்களும் தொற்று நோய் களும் அதிகரித்திருக்கின்ற இக்கால கட்டத்தில் இலட்சக்கணக்கான மக்களை பிரதிநிதித்து வப்படுத்து கின்ற இரத்த வங்கி சிறப்பாக சீராக இயங்குவதற்கு நாம் எல் லோரும் பொறுப்பானவர்கள். ★

## செயலமர்வும் கருத்தமர்வும்

(யாழ்ப்பாணம் )

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தமர்வும் செயலமர்வும் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 5.30 மணிவரை இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள் ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத விப பணிப்பாளர் சிவத்தமிழ்வித் தகர் சிவ.மகாலிங்கம் தலைமை யில நடைபெறவுள்ள செயலமர்வு மற்றும் கருத்தமர்வில், தெல்லிப்பளை, உடுவில், சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளி லுள்ள அறநெறிப் பாடசாலை களின் ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## ஆன்மீகச்சொற் பொழிவு

(யாழ்ப்பாணம் )

இந்துசமய விவகார அலுவலாகள் திணைக்களத்தின் யாழ். மாவட் அலுவலகத்தினால் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பி.ப 6.30 மணிக்கு நடாத்தப்பட்டுவரும் ஆன்மீகச் சொற் பொழிவில் எதிர்வரும் 26 ஆம் திகதி "அன்பு வலையில் வீழ்ந்த வேடன்" எனும் விடயம் பற்றி செஞ்சொற்செல்வன் இரா. கேதீஸ்வரனின் சிறப்புச் சொற் பொழுவு இடம்பெறவுள்ளது. (ற)

## நாய்களுக்கு தடுப்பூசி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைப் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விஷர் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றுதல் நாளையும் 21,24ஆம் திகதிகளிலும் சாவகச்சேரி நகர சபையினால் கீழ் குறிப்பிடப் பட்ட இடங்களில் இடம்பெறுமென சாவகசசேரி நகரசபைச் செயலா ளர் கு.ஆறுமுகம் அறிவித்துள் ளார்.

அதற்கமைய தடுப்பு மருந் தேற்றும் இடங்களின் விபரம் வருமாறு.

நாளைய தினம் கச்சாய் வீதியிலுளள லிகோரியார் தேவால யத்திலும, உதயசூரியன் சன சமூக நிலையம் ஆகியவற்றிலும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை சாவகச்சேரி நகர சபை அலுவலகத்திலும் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை கெருடாவில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலை யம், நுணாவில் மேற்கு அம் பாள் சனசமூக நிலையம், வேரற்கேணி யடிகலைமகள் பாலர் பாடசாலை ஆகியவற்றி லும் நாயக ளுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன. (க-47)

# தமிழ் இலக்கிய விழா திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் 8,9.10ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தமிழ் இலக்கிய விழா அடுத்த மாதம் 9,10,11ஆம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு ஊர்திகளுடன் கூடிய கிராமிய பண்பாட்டு ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து, யாழ்.இந்து மகளிர் கல்லூரியைச் சென்றடையும்.

வட-கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் எதிர்வரும் முதலாம் திகதி தமிழ் இலக்கிய விழா சம்பந்த மான நிகழ்ச்சி நிரலை வெளி யீட்டு வைப்பார்.

3 நாள் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-5)

# கவிதைத் தொகுப்பு வெளியீடு

(சாவகச்சேரி)

திருக்குமரனின் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று பி.ப. 4.00 மணிக்கு நாவலர் கலாசார மணிமண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள் ளது. (க-47)

# தரம் I இல் மாணவர் உள்ளீர்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

(கொழும்பு)


தரம் ஒன்றுக்கான அனுமதிக காக விண்ணப்பிக்கும் அனைத்து மாணவ, மாணவியரும் பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதிக்கப படுவதை உறுதி செய்யவேண்டு மென மேல் மாகாண முதலமைச சர் றெஜினோல்ட் கூறே தெரிவித்துள் ளார்.

பிரபல பாடசாலைகளுக்கான போட்டிகள் காரணமாக ஏனைய பாடசாலைகள் மூடப்படுவதாக வும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த வருடம் தொடக்கம் தரம் ஒன்றுக்கான வகுப்புக்கள் பாடசாலைகளில் மட்டுப்படுத்த் படும்.

இதன்படி கொழும்பு மாவட்ட பாடசாலை ஒன்றில் ஆண்டு ஒன்றிற் காக ஆகக் கூடுதலாக 4 வகுப்புக் கள் மாத்திரமே கொண்டிருக் கலாம். மற்றும் களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் ஒரு பாடசாலையில் ஆகக்கூடுத லாக 3 வகுப்புக் கள் இருப்பதற்கு அனுமதிக்கப்படும். (ற-7)


தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்
17ஆம் ஆண்டு நினைவலைகள்



புரட்சியில் மலரும் பூக்கள்

பூக்கும் மலர்கள் – திலீபன்
புரட்சியில் மலரும்
காக்கும் கரங்கள் – திலீபன்
களத்தில் விளையும்
குதிக்கும் அலைகள் – திலீபன்
கொடியில் சிவக்கும்
கதைக்கும் மேசைகள் – திலீபன்
கருத்தை தொடரும்

தேசிய எழுச்சிப் பேரவை
காரைநகர் பிரதேசம்.

தமிழீழக் கூத்தன்

(C/526)

# வலி கிழக்கில் வாழ்க்கை வசதிகளற்ற யோகபுரமும் செல்வபுரமும்

**ஊர்த் தரிசனம் 11**

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்ட அணுகுமுறைகளால் அடிமட்ட கிராம மக்களின் வாழ்க்கை இன்னமும் மேம்படும் வகையில் முன்னேறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

வளம் மிக்க வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உரும்பிராய் தெற்கு J/265 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் மற்றும் யோகபுரம் கிராமங்களில் எவ்வித மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டங்களும் .இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவ் விரு கிராமங்களின் வறுமை நிலையை நோக்கும் போது அபிவிருத்தித் திட்டங்களுககாக ஒதுக்கப்படும் அரச நிதியுதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறதா என்றே சிந்திக்கத் தோன்றுகின்றது.

யாழ்.நகரிலிருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் 19 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட இக் கிராமங்களில் 1688 பேர் கொண்ட 416 குடும்பங்கள் வசிக்கின்றன.

இவர்களில் 836 பேர் ஆண்கள், 852 பேர் பெண்களாவர். இதில் 104 இளைஞர்களும் 136 யுவதிகளும் 593 சிறுவர்களும் 448 மாணவர்களும் 38 விதவைகளும் 14 அங்கவீனர்களும் அடங்குவர்.

இங்குள்ள முழுக் குடும்பங்களும் நிவாரணத்தை நம்பியே வாழ்ககை நடாத்துகின்றன. குடும்பத் தலைவன் தலைவி இருவருமே கூலித் தொழில் மூலமே வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்தொழிலே பிரதான தொழிலாகவும் இக் கிராமங்களிலீ உள்ளன.

நாற்பத்தியிரண்டு குடும்பங்களின் பாரத்தைப் பெண்களே சுமக்கின்ற பரிதாபகர நிலையினையும் இங்கு காணலாம். 22 குடும்பங்கள் மாதாந்த உதவிப் பணத்தைப் பெறுகின்றன.

இக கிராமங்களின் பௌதீப் வளத்தினை நோக்கின், 150 பரப்பிற்கும் மேற்பட்ட கண்டக்கல் பகுதியும் முந்திரிகை செய்கை பண்ணக் கூடிய வளமான நிலமும் கால்நடை வளர்க்கக் கூடிய போதிய நில வசதியும் உள்ளன. விவசாய நிலம் 250 பரப்பிற்கும் அதிகமாக இருக்கின்ற போதிலும் இவற்றினை பயன்படுத்த முடியாத அளவிற்கு வறுமை நிலையில் இக் கிராமங்களில் மக்கள் உள்ளனர்.

அடிப்படைத் தேவைகள் இப்பகுதி மக்களுக்கு முக்கிய பிரச்சினைகளாக இருக்கின் றன. கல்வி, சுகாதாரம,போக்குவரத்து போன்ற மக்களின் அடிப்டைத் தேவைகள் யாவும் பற்றாககுறையாகவே உள்ளன. அதற்கான திட்டங்கள் ஏதும் நடைமுறைப் படுத்தப்படவுமில்லை.

### வதிவிட பற்றாக்குறை

இக் கிராமத்தவர்களின் வதிவிடப் பற்றாக்குறையினை குறிப்பிட்ட கோப்பாய் மக்கள் நலன் ·காக்கும் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர் கே.நித்தியரத்தினம்" இலங்கை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்ட காலப்பகுதியில் சில கல் வீடுகளும் ,80 சதவீதத்திற்கும் அதிகமான மண் வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வீடுகளை இழந்த குடும்பங்கள் மழைகாலங்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.'' எனத் தெரிவித்தார்.

தற்போது இக் கிராமங்களில் 167 மண் வீடுகளையும் 127 மிகச் சிறிய கல் வீடுகளையும் காணமுடியும். இவற்றில் 17 கல் வீடுகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் தலா 1லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. எனினும் 70 சதவீதமான குடும்பங்கள் கல் வீட்டு வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றன.

### நீர்வசதி இன்மை

தேவைக்கேற்ப கிணற்று வசதிகளும் இங்கில்லை. இங்குள்ள 11 பொதுக் கிணறுகளையே பல குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றன. 41 குழாய்க் கிணறுகளும் 19 திறந்த கிணறுகளும் பாவனையிலுள்ள போதிலும் அவை போதுமானவை யாக இல்லை. இன்னமும் சுமார் 150 கிணறுகளாவது இருந்தால் தான் மக்களின் நீர்த் தேவை களை ஓரளவாவது பூர்த்தி செய்யலாம்.

40 மலசலகூடங்கள் மட்டுமே இங்கு காணப்படுகிறது. இயற்கைக் கடன்களை கழிக்க பற்றைகளையே இங்குள்ள மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சுகாதார சீர்கேடுகள் காணப்படுகின்றது.

இக் கிராமங்களில் நிலவம் வறுமைச் சூழலில் கல்விக்கான சாதகமான சூழ்நிலை சூனியமாகவே உள்ளமை கவலைக்குரியதாகும். இங்குள்ள 448 மாணவர்களும் கற்றலுக்கான அடிப்படை வசதிகளின்றி உள்ளனர்.

பொருளாதார நலிவு நிலை மற்றும் பெற்றோர்களின் கல்வியறிவின்மை காரணமாக 72 மாணவர்கள் கல்வியைக் கைவிட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது."ஆரம்பப் பாடசாலை ஒன்றேனும் இங்கில்லாத காரணத்தினால் இரண்டு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்துக்கு கால் ·நடையாக சென்று மாணவர்கள் கற்று வருகின்றனர்'' என கோப்பாய் மக்கள் "நலன் காக்கும் பிரிவின் தலைவர் வ. செல்லத்துரை குறிப்பிட்டார்.

### போசாக்குணவு வழங்கல்

இங்குள்ள முன்பள்ளி சிறுவர்கள் போசாக்கின்றிக் காணப் படுகின்றனர். இவ் முன்பள்ளி சிறுவர்களின் உடல் ஆரோக்கியத்தினைக் கருத்தில் கொண்ட கொக்குவில், யாழ். இந்துக் கல்லூரிகளின் முன்னாள் அதிபர் திரு. பஞ்சலிங்கம், திருமதி ஆனந்தரஞ்சன் ஞாபகார்த்தமாக போசாக்குணவுகளை தினசரி வழங்கி வருகின்றமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

மேலும் இவ்விரு கிராமங்களும் மருத்துவ வசதிகள்ற்றவை. இதுபற்றி உரும்பிராய் தெற்கு கிராம அலுவலர் எஸ்.சூரியகுமார் கூறுகையில், "இதுவுரைக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைக் கூட இங்கு நிறுவவில்லை. இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் சென்றே மருத்துவ வசதிகளை பெற வேண்டிய நிலையே இங்குள்ள மககளுக்கு உள்ளது. இதுமட்டுமன்றி சிறுவர்களுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் கூட நடமாடும் சேவை இங்கு இடம் பெறுவதில்லை.இவை காரணமாக சிறுவர்கள் முதியவர்கள மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்''

மேலும் நிவாரணப் பொருட்களைப் பெற வேண்டுமாயின் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்திலுள்ள உரும்பிராய் சந்தி கூட்டுறவுக் கடைக்கு செல்ல வேண்டிய நிலையே உள்ளது.

### திருமணப்பதிவு

இக் கிராமங்களில் பல தம்பதிகள் விவாக பதிவின்றி வாழ்ந்து வருகின்றனர். இவர்களின நன்மை கருதி கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினர் 24 தம்பதியினருக்கு இலவச திருமணப்பதிவினை மேற்கொண்டு அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப் பட்டுள்ளன.

இங்குள்ள வீதிகள் மிகவும் மோசமாகவே உள்ளன. தார் இடப்படாது நீண்ட காலமாக இருக்கும் இவ் வீதிகளில் கற்திட்டுக்களின் வெளிக் கிளம்பல்களினால் பிரயாணம் செய்வோர் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் மின்சார, தொலைத் தொடர்பு இணைப்புகளும் வழங்கப்படவில்லை.இதனால் சட்ட விரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

இத்துயரங்களை அனுபவிப்பவர்களாக யோகபுரம் செல்வபுரம் கிரரமத்தவர்கள் மட்டும் இருக்கவில்லை. இவ்விரு கிராமங்களிலுமுள்ள 3 நலன் புரிநிலையங்களில் அவல வாழ்வு வாழந்து வரும் வலி வடக்குப் பிரதேசத்ததைச்சேர்ந்த 120 குடும்பங்களும் சேர்ந்தே அனுபவிக் கின்றனர்.

இந்த குடும்பங்களின் எதிர்பார்பாப்பெல்லாம் எப்போது தாம் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறுவது என்பதாகும்.

மூன்று நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து வரும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் துயரங்களும் மிக அதிகம். சிறிய குடிசைகளில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கு மலசலகூடம் மற்றும் கிணறுகள் பொதுவானவையாகவே உள்ளன.

மழைகாலங்களில் இக் குடும்பங்கள் படும் கஷ்டங்களைப் பார்க்கும் போது காண்போர் கண்கள் நீர் சொரியும். குழந்தைகளின் அழுகை ஒலியும் முதியவர்களின் முனகல் ஒலியும் இங்கு சாதாரணமாகிவிட்டது. இந் நலன்புரி நிலைய மக்கள் அடிக்கடி தொற்று நோய்க்கும் இலக்காகி வருகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்கள் கல்வியிலிருந்து விலகி குழந்தைத் தொழிலாளர்களாக மாறியுள்ளனர் என்பதனை அறியும போது மனம் வேதனையடைகின்றது.

இறுதியாக, இக் கிராமத்தில் வாழும் அனைத்து மக்களும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு தமது நிலை குறித்து 'விழிப் புணர்வு' அடைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இக் கிராமத்தவர்கள் விழிப் புணர்வு அடைவதன் மூலமே திட்டமிடப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு, அதன் பலாபலன்களை மக்கள் எட்டமுடியும். அப்போது தான் மக்களின் குறைகள் ஓரளவாவது நீங்கி அவர்கள் சகஜ வாழ்வு வாழ முடியும்.

**தரிசித்தவர்**
**ந.தி. உமாசங்கர்**







படங்கள்:- டிலக்ஷன் ஸ்ரூடியோ

# இலங்கை–இங்கிலாந்து போட்டி
# மழை காரணமாக இடைநிறுத்தம்



இலண்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிளில் நேற்றுமுன்தினம் இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான போட்டி மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இப்போட்டி மீண்டும் நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் அதப்பத்து, இங்கிலாந்து அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி, துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மழை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தப்படும் வரை 32 ஓவரில் 3 விக்கெற்றுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

டிரஸ்கோதிக் 64ஓட்டங்களுடனும் பிலின்ரொப் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

(ற-7)

# புதிய பந்துவீச்சாளர்களே இங்கிலாந்து அணியின் பலம்

## இயன் பொதம்

ஸ்டீபன் ர்மிஷன், அன்ட்ரூ பிளின்ட்டொப் ஆகியோரே இங்கிலாந்து அணியின் பலமாக உள்ளார்கள். கடந்த 2 ஆண்டுகளாக இங்கிலாந்து அணி சிறப்பாக வெற்றிகளை குவிப்பதற்கு இவர்கள் இருவருமே முக்கிய காரணமென இங்கிலாந்தின் முன்னைநாள் சகல துறை கிறிக்கெற் ஆட்டக்காரர் இயன் பொதம் தெரிவித்திருக்கிறார்.

இங்கிலாந்தின் பலம் எது? 2002ல் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் அறிமுகமான ர்மிஸன் குறுகிய காலத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளார். இந்த ஆண்டில் நடநத டெஸ்ட் போட்டிகளில் இவரது விரைவான பந்துவீச்சு மூலம் நிறைய விக்கெற்றுக்களை கைப பற்றியுள்ளார். கடைசியாக விளையாடிய 11 டெஸ்ட் போட்டில் மட்டும் ர்மிஸன் 61 விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட் யில் வெறும் 47 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 7 விக்கெற்றை வீழ்த்தியது அபாரம். எந்த இடத்தில் பந்துவீசினால் விக்கெற் கிடைக்கும் என்பதை நனகு புரிந்து வைத்துள்ளார் என சபதம் கூறியுள்ளார். ர்மிஸன் பநது வீச்சாளர்கள் தர விரிசையில மெக்ராத், முரளிதரன் போன்றவர்களை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தை பெற்றுள்ளார். அடுத்து பிளின்டாப் அணியின் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக விளங்கிறார். கடைசியாக விளையாடிய 11 டெஸட் போட்டி களில் 34 விக்கெற் பெற்ற இவர், 800 க்கும் அதிகமான ஓட்டங்களை குவித்து உள்ளார். டெஸ்ட்டில் மட டுமில்லாமல் ஒருநாள் போட்டிகளுக்கு ஏற்ப விரை வாகவும் ஓட்டங்களை குவிக்கிறார். இதே போல் அணியின் மற்ற வீரர்களும் நல்ல ஒத்துழைப்பு அளிக்கின்றனர். இதனால் இஙகிலாந்து அணி மேலும் பல வெற்றிகள் குவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவும் இயன் பொதம் கூறியிருக்கிறார். (ற -7 )

# விளையாட்டுச் செய்திகள்

# தலைமைறைவாகிய கரபந்தாட்டக்குழு ஜேர்மன் பொலிஸரால் கைது

(ஜேர்மன்)

இலங்கையிலிருந்து ஜேர்மன சென்ற போலி கைப்பந்தாட்டக் குழுவைச் சேர்ந்த 23 பேரும் நேற்றுமுன்தினம் மாலை ஜேர்மன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் ஜேர்மனியில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியொன்றில் கலந்து கொள்ள விணணப்பித்து அதற்கான விசாவைப் பெற்று இந்த அணியினர் சென்றிருந்த போதிலும் போட்டியில் கலந்து கொள்ளாமல் இவர்கள் தலைமறை வாகியிருந்தனர்.

இவர்கள் திட்டமிட்டு இத்தாலிக்கு செல்லும் நோக்கத்துடனேயே இந்த பயணத்தை மேற்கொண்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஒரு வாரகாலமாக ஜேர்மனியில் தலைமறைவாகியிருந்த இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை ஜேர்மன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வேறு 33 பேர் லண்டனுக்கு சட்ட விரோதமாக செல்வதற்கு உதவிய சந்தேகத்தின் பேரில் ஏயர் லங்கா அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட 33 சட்டவிரோத பயணிகளுடன் இவரும் தற்போது நீர் கொழும்பு சிறைச் சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற)

# கிண்ணத்தை வெல்வதில் தோற்றாலும் கிளைஸ்டர்ஸின் உள்ளத்தை வென்ற ஹெவிட்

டென்னிஸ் அரங்கின் காதல் ஜோடிகளான கிளைஸ்டர்ஸ், ஹெவிட் திருமணம் 2005 பெப்ரவரியில் நடைபெறவுள்ளது. இவர்கள் இருவரும் 2000ஆம் ஆண்டு நடந்த அவுஸ்திரேலியன் ஓபன் போட்டியின்போது முதன் முறையாகச் சந்தித்துக் கொண்டனர்.

தங்கை எல்கே வற்புறுத்தியதால், ஹெவிட்டிடம் ஓட்டோகிராப் வாங்கசென்றார் அக்கா கிளைஸ்டர்ஸ். அப்போது இருவர் இடையேயும் மலர்ந்த நட்பு பின்னர் காதலாக மாறியது. சிட்னியில் படகுச்சவாரி என காதல் பறவைகளாக உலாவந்த இவாகளது திருமணம் 2003, டிசம்பரில் நிச்சயிக்கப்பட்டது. இந் நிலையில், திருமணம் 2005 பெப்ரவரியல் நடக்க இருப்பதாக கிளைஸடர்சின் வெப்சைட்டில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

21வயதான பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ் 21ஒற்றையர் பட்டங்கள் வென்றுள்ளார். சமீபத்தில் நடந்த யு.எஸ்.ஓபன் இறுதிப் போட்டியில் பெடரரிடம் தோற்ற 23வயதான ஹெவிட் 23ஒற்றையர் பட்டங்கள் வென்றுள்ளார். இதில் 2001,யு.எஸ்.ஓபன், 2002 விம்பிள்டன் சம்பியன் பட்டங்களும் அடங்கும். பெல்ஜியத்தில் அதிகவரி விதிப்பதால் வேறு நாட்டு குடியுரிமை பெறப்போவதாக கிளைஸ்டர்ஸ் கூறிவந்தார். இனி, இவர் திருமணத்திற்கு பிறகு ஹெவிட்டின் சொந்த



நாடான அவுஸ்திரேலியாவிலேயே நிரந்தரமாக வசிக்கலாம்.(ற-7)

# சிறந்த களத்தடுப்பே ஆஸியின் வெற்றி ரகசியம்

அவுஸ்திரேலிய அணியின் வெற்றியில் களத்தடுப்பு பெரும் பங்கு வகிக்கிறது. இந்தத்துறையில் சிறப்பாக செயல்பட்டதால் தான் 2003ல் உலக கோப்பையை கைப்பற்ற முடிந்தது. தவிர வீரர்கள் எந்தப் பகுதியிலும் சிறப்பாக களத்தடுப்பு செய்யக்கூடிய திறமைமிக்கவர் களாக இருப்பது அணயின் மகப் பெரிய பலம் என்று அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிககிப் பொண்டிங் தெரிவித்திருக்கிறார்.

கிரிக்கெற்றில் ஒவ்வொரு கால கடடத்திலும் ஏதாவது ஒரு அணி அவுஸ்திரேலியாவுக்கு போட்டியாக எழுச்சி காணும். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற அணிகள் சவாலாக விளங்கினாலும் ...ட, முதல் இடத்தை மட்டும் பெற இயலவில்லை. உலக சம்பியனான அவுஸ்திரேலியா நீண்ட காலமாக முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. அணியின் வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயல்படுவதால்தான் இந்த தொடா வெற்றி சாத்தியமாகிறது எனறு விளக்கம் தருகிறாா பொண்டிங்.

அவா மேலும் தனது அணி பற்றி கூறுகையில். அணியில் உள்ள 11பேரும் நூறு சதவீத திறமையை வெளிப் படுத்துவதால் தான் வெற்றி நடையை தொடரமுடிகிறது. ஒரு சிலர் மோசமாக செயல்பட்டாலும் கூட வெற்றி மறைந்து, தோல்வி தொற்றிக் கொள்ளும். வெற்றிக்கு சிறப்பான களக்கடுப்ப (மக்கிய காரணம். 2003 உலக கோப்பை போட்டியில் களத்தடுப்புத்தான் கோப்பையை பெ...றுத்தந்தது.



மினி உலகக் கோப்பையில் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அணியில் உள்ள அனைவரும் அபாராமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தொடக்கத்தில் மக்ராத் மோசமாக பந்துவீச மாற்றி விடலாம் என்று யோசித்தேன். ஆனாலும் விரைவாக தவறை திருத்திக் கொண்ட இவர் 3 விக்கெற் வீழத்தி திருப்புமுனை ஏற்படுத்தினார். அரையிறுதியில் சந்திக்க இருக்கும் அணியை பொறுத்து பிரட்லீக்கு வாய்ப்பு அளிக்கப்படும். நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் லீக்கு பதில் ஷேன் வாட்சனை தேர்வு செய்ய வேண்டியதாயிற்று. அரையிறு தியல் பிரட்லீக்கு வாய்ப்பு அளிக் கப்படலாம். இவரது அசுர வேகபபந்து வீச்சு எதிரணிக்கு நிச்சயமாக சிக்கலை ஏற்படுத்தும். கில்லஸ்பி தவிர காஸ்பரோவிஸ்ும் இப்போது அப்ாராமாக பந்துவீசுகிறார். தொடக்கத்தில் சிறப்பாக பந்துவீசும் இவர் கடைசி கட்டத்திலும் நிதானமாக பந்துவீசி நம்பிக்கை தருகிறார். இவ்வாறு பொண்டிங் கூறியிருக்கிறார்.

(ற-7)

## சமாதானத்துக்கான ஓட்டம்

ஜேர்மன் இலங்கை நட்புறவு விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கையின் 14 இடங்களில் இருந்து சமாதானத்துக்கான ஓட்டம் எனும் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

இச்சமாதான ஓட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார், அம்பாறை மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

24 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் இருந்து 30 வீரர்களும் 10 வீராங்கனைகளும் யாழ்.கச்சேரி வரை ஓடிச்செல்வர். ஆதன் பின் சாவகச்சேரி, ஆனையிறவு, கிளிநொச்சி, மாத்தளை ஆகிய பிரதேசங்களில் சில கிலோ மீற்றர்கள் ஓடி கண்டியை எதிர்வரும் 27 ஆம் திகதி சென்றடைந்து இச்சமாதான ஓட்டத்தை நிறைவு செய்வர்.

(ற -5,7)

# முத்தரப்புத் தொடரில் பங்கேற்க சிம்பாப்வே அணி பாக் விஜயம்

முத்தரப்புக் கிாிக்கெற் தொடரில் பங்கேற்பதற்காக தைபு தலைமையிலான சிம்பாப்வே அணி லாகூர் சென்றுள்ளது.

பாகிஸ்தானில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் முத்தரப்பு தொடர் நடக்கவுள்ளது. இதில் இலங்கை, பாகிஸ்தான, சிம்பாப்வே அணிகள் மோத உள்ளன. இந்த தொடரில் பங்கேற்க உளள சிமபாப்வே அணி. மினி உலகக் கோப்பை கிரிக்கெற் தொடரின் லீக் சுற்றில் சிம்பாப்வே அணி இங்கிலாந்து, இலங்கையோடு மோசமான தோல்வியை தழுவியது. இதனால் தொடரிலிருந்து வெளியேறிய சிம்பாப்வே முன்னதாகவே பாகிஸ்தான் வந்துள்ளது. கடந்த 12 ஒருநாள் போட்டிகளில் தோல்விகளையே பெற்றுவரும் சிம்பாப்வே இந்தத் தொடரில் பெரிய அளவில் சாதிப்பது என்பது சிரமமான ஒன்றுதான்.

இந்த அணிக்குப் புதிய பயிற்சியாளராக மேற்கு இந்தியத் தீவுகள் அணியை சேர்ந்த முன்னாள வீரர் பிலிப்சிம்மன்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரது பயிற்சியின் கீழ் சிம்பாப்வே அணி எந்தளவிற்கு தனது திறமைகளை வெளிப்படுத்துகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சிமபாப்வே அணியில் தந்டேன்டர் தைபு, பிரண்டன் ரெய்லர், சிபன்டா, டியோன் இப்ராகிம் வேர்மியூலன், மற்றிக்கென்யரி,



அலிஸ்டர் மரக்வெடே, என் காலா சிகும்பரா, எட்வர்ட்ரெயின்ஸ் போர்ட், முபரிவா உற்சேயா, டக்ளஸ் ஹொண்டா பனியங்காரா கிரமர் ஆகியோர் வகிக்கின்றனர்.

(ற - 7)

# இன்று ஒரு தகவல்

## பெண்-ஒரு விஞ்ஞானப் பார்வை

"அறிவில் சிறந்தீவர்கள் ஆண்களா? பெண்களா?" என்று என் நண்பர் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். அவர் மெதுவாக தலையைச் சொறிந்து கொண்டு "அதில் என்ன சார் அதில் சிறந்தவர்கள் பெண்கள் தான்" என்றார்.

அனுபவ அடிப்படையில் அவர் அப்படிச் சொன் னார். அறிவியல் அடிப்படையில் பார்ப்பவர்களும் இப்படித்தான் சொல்கிறார்கள். இயற்கையின் நோககம் இனப்பெருக்கம் இதில் பெண்களின் பங்கு அதிகம்.அதனால் இயற்கையே பெண்களுக்குப் பல சலுகைகளையும் சக்தியையும் கொடுத்திருக்கிறது.

வெளிநாட்டில இதைப் பற்றியெல்லாம் நிறைய ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள். புள்ளிவிபரங்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆண் குழந்தை களை விட பெண் குழந்தைகள் முனனதாகவே பேச ஆரம்பித்து விடுகின்றனர். அதிக எண்ணிக்கை யில் வார்த்தைகளைக் கற்றுக்கொள்வது. பலவிதமான வாக்கிய அமைப்புக் களை அமைத்துப் பேசுவது போன்றவற்றைச் சீக்கிரம் செய்வது பெண் குழந்தைகள் தானாம்.

சமவயதுள்ள ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகளை சோதனை செய்து பார்த்திருக்கின்றனர். ஒரே கேள்வியைப் பலவிதமாகக் கேட்பது. ஒரே விட யத்தை வேறு வேறு கோணங்களில் இருந்து விளக்குவது. தவறில்லாமல் பேசுவது. வேகமாகப் படிப்பது,எழுதுவது, புரிந்துகொள்வது எனறு பல சோதனைகள். இவற்றில் ஆண் குழந்தைகளை விட பெண்குழந்தைகள் ஒன்றரை மடங்கு அதிகத் திறமை உள்ளவர்களாக இருக்கின்றனராம்.

இன்னொரு மொழியைக் கற்றுக்கொள்வது, பேசுவது,எழுதுவது என்பனவும் பெண்குழந்தை களுக்குச் சுலபமாக இருக்கின்றது. இரண்டு மொழி களை மாற்றி மாற்றிப் பேசுவது மொழிபெயர்ப் பது ஆகியவற்றிலும் பெண்களுக்கு அதிகத திறமை உள்ளதாம்.

சரி இவற்றை விடுங்கள் புள்ளி வைத்துக் கோலம போடுவதிலிருந்து. கைக்கடிகாரங்களிலும் கணனி யிலும் நுண்ணிய பாகங்களைப் பொருத்துவது வரை பெண்கள் திறமையாகச் செய்கின்றனராம. நுட்பம், துல்லியம் விரைவு சிறுகை இயக்கங்களுடன் செய்ய வேண்டிய மென்மையான பணிகள் இதற்குத் தேவை. கவனக்குவியம், பொறுமை என்பன இவை பெண் களிடம் தான் உள்ளன.

அமெரிக்காவில் இன்னொரு சோதனை கூட செய்து பார்த்திருககின்றனர்.பெண்களின் மூக்கு மோப்ப உணர்வு எப்படியென்று பார்ப்பதற்கான அதிக எண்ணிக்கையில் வாசனைகளைப் பிரித்து கண்டுபிடிக்கிறார்களாம் பெண்கள். அந்த அளவுக்கு ஆண்களால் முடியவில்லையாம்.

சரி.காது எப்படி? செவிப்புலன் உணர்வும் பெண் களுககுத்தான் அதிகமாம். ஒரு கும்பலில் பலவித மான சத்தம். அதற்கு இடையில் குரலின் தொனி. ஏற்றஇறக்கம் இதை வைத்தே பேசும் ஆளைக் கண்டுபிடித்து விடுவார்களாம். இன்னொரு விசயம். ஒரு பொருளைப் பார்த்ததும் அது என்னவென்று அடையாளம் கண்டுபிடிப்பது, அதை மனதில் பதிய வைப்பது, அதன் பின் இன்னொரு சந்தர்ப்பத்தில் அது எங்கே இருந்ததென்று சரியா ஞாபகப்படுத்திக் கொள்வது இவற்றிலெல்லாம் பெண்கள் தான் முன்ன ணியில இருக்கின்றனர்.

ஒரு சராசரி சூழ்நிலையில் ஆண்களை விட அதிகமான எண்ணிக்கையில் புன்னகை புரிவது. சிரிப்பது பெண்கள் தான். அதிகமான தோழமை உணர் வுடன் பேசுவதும் அவர்கள் தான். பெண்கள் இருவர் பேசிக் கொண்டிருப்பதையும் பாருங்கள். அதேபோல் இரண்டு ஆண்கள் பேசிக் கொண்டி ருப்பதையும் பாருங்கள். ஆண்கள் ஓரடி தள்ளி நின்றே பேசிக் கொண்டிருப்பார்களாம். மருத்து வர்களை எடுத்துக் கொள்ளுங்கள். சிரித்த முகத்துட்ன் நோயாளியிடம் பரிவுடன் பேசுவதில் பெண டாக்டர்கள் தான் அதிகம்.

இதுவரைக்கும் சொன்னதெல்லாம் ஏதோ பெண்களுக்கு ஐஸ் வைப்பதற்காக என்று யாரும நினைத்து விடவேண்டாம். இவை எல்லாமே விஞ்ஞான ரீதியான விடயங்கள். ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ள செய்திகள். அனுபவத்திலும் நாம் பார்த் துக் கொண்டு தானிருக்கிறோம்.நமது வீடுகளிலே யே பெண்பிள்ளைகள் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஆண்பிள்ளைகள் புத்தி சாலித்தனமாக எதையும் புரிந்துகொள்வதில்லை.

ஒரு ஆண்பிள்ளை தனது பெற்றோரின் திரு மணப் போட்டோக்களைப் புரட்டிக் கொண்டிருந்தா னாம். அம்மாவிடம் கேட்டான்" அம்மா...இது யார் இந்தப் படத்தில் அழகாக மீசை வைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டு நிற்பது?" என்று கேட்டான். "அதுதான் உன் அப்பா" என்றார் அவர். "அப்படி யென்றால் இப்போது நமது வீட்டில நரைத்தலையுடன் அழுது வடித்து கொண்டிருப் பவர் யார்?" என்றானாம் அந்தப் பையன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# விடுதலைப் புலிகளின் கடற்படையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது

## இந்தியக் கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஒருமைப்பாடு ஒற்றையாட்சி மற்றும இறையாண்மை என்பன சீர்குலையாமல் இருக்கும் வகையில் இந்தியா தனது ஆதரவை வழங்கும் என இந்தியக் கடறபடைத் தளபதி அருண பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்ட அவர் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு தமிழ்ழ விடுதலைப்புலிகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட வினாவிற்கு திருகோணமலையில் உள்ள எண் ணெய்க் குதங்களை இந்திய நிறுவனங்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதன் காரணமாக வே திருகோணமலைத் துறைமுக விடயத்தில் இந்திய அரசு ஈடுபாடு கொண்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகம் இலங்கைக் கடற்படையினருக்கு முக்கியமான ஒன்றாகவே விளங்குகின்றது. இதனால் இத்துறைமுகம் பிழையானவர்களின் கைகளில் செல்வதை இந்திய அரசு விரும்ப வில்லை எனத் தெரிவித்தார்.

அத்துடன் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை யில் அவர்கள் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக் கம் எனவே புலிகளினால் அமைக்கப்படும். கடற்படை யையோ அல்லது அது சம்பந்தப்பட்ட பிரிவு களை யோ எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-8)

# முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் குறித்து விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சு!

(புத்தளம்)

வடமாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் குறித்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்த விருப்பம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவர் தேசகீர்த்தி என்.எம். அஸீம் அதற்கான சந்தர்ப்பம் வெகுவிரைவில ஏற்படுமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

புத்தளம் மாவட்ட சமாதான நீதிவான்களின் கூட்டம் அண்மையில் புத்தளம் சென் அன்றூஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

மாவட்டத்தின் செயலாளர் மொகமட் அலி தலைமையில் நடைபெற்ற போது மேலும் அவர் கூறியதாவது,

இலங்கையில் 57 ஆயிரம் சமாதான நீதிவான்கள் இருப்பதாக தெரிவிக்கப்பகின்றது.,

எனவே அவர்களையும் எமது சங்கத்தில் இணைத துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமாதான நீதிவான்கள் கௌரவமானவர்கள் என் பதை அனைவரும் ஏற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளை எமது சங்கம் மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை எதிர்காலத்தில் சமாதான நீதிவான் கள் நியமிக்கப்படும் போது குறைந்தது க.பொ.த.சாதாரணதரத்தில் மூன்று பாடத்திலேனும் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற ஆலோசனையை நீதி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்துள் ளோம்.

விடுத்லைப்புலிகள் ஒருபோதும் யுத்தத்தை விரும்பவில்லை. ஆவர்களால் தென்பகுதி மக்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதை அறியமுடிகின்றது. சமாதான நீதிவான்கள் சங்கமானது இனங்களுக் இடையில் ஒருங்கினைப்பை ஏற்படுத்தும் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்கும்மெனவும் சங்கத்தின் தலைவர் எம்.என்.அஸீம் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் சங்கத்தின் செயலாளர் தேச கீர்த்தி ஜயந்த களுபோவில மனிதவுரிமை ஆணைக் குழுவின் பணிப்பாளர் ஜோர்னபிலிப் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(க-15)

# இராசி பலன்

19.09.2004

*(புரட்டாதி 03, ஞாயிற்றுக்கிழமை )*

பஞ்சமி பி.ப. 3.03 மணிவரை

விசாகம் பி.ப. 4.33 மணிவரை

இராகுகாலம் 04.33 - 6.03 மணிவரை

சுபநேரம் 9.03 - 10.33 மணிவரை

**மேடம்**

அமைதிக் குறைவு, போசனசுகம், உறவினர் வெறுப்பு, கீர்ரிய தாமதம்.

**இடபம்**

குடும்ப மகிழ்ச்சி, தெய்வதரிசனம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை.

**மிதுனம்**

புதிய முயற்சி, விருந்துபசாரம், தெய்வசிந்தை, உறவினர் வருகை.

**கடகம்**

புத்திரரால் கவலை, சொத்துப் பிணக்கு, முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு.

**சிங்கம்**

மனப்பதற்றம், வேலைப்பளு, காரிய தாமதம், ரோக நிலை.

**கன்னி**

கீர்த்தி, முயற்சி கைகூடும், உறவினர் சந்திப்பு, போசன சுகம்.

**துலாம்**

வீண் விவாதம், முயற்சி தாமதம், மனக்கவலை, பொருள் விரயம்.

**விருச்சிகம்**

தெய்வ சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, புதிய ஆலோசனை, போசன சுகம்.

**தனுசு**

சயனசுகக் குறைவு, பணவிரயம், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம்.

**மகரம்**

எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி, போசன சுகம், தனலாபம்.

**கும்பம்**

அதிகாரம், தொழில் விருத்தி, தெய்வசிந்தை, நல்ல செய்தி.

**மீனம்**

பிரயாணம், புதிய திட்டமிடல், பிதா சிந்தை, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது) - **வளவன்**

# மருத்துவபீட மாணவி புஷ்பமாலா நேற்றுடன் போராட்டத்தை கைவிட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி கி.புஷ்பமாலா மேற்கொண்டுவந்த போராட்டத்திற்கு சுமுகமான முடிவு எட்டப்பட்டதையடுத்து அவர் தனது போராட்டத்தை நேற்றுக் காலை 9.00மணி முதல் கைவிட்டிருப்பதாக சர்வதேச தழிழீழ மாணவர் பேரவை அறிவித்துள்ளது.

இதுவிடயம் குறித்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிக்கையொன்றையும் விடுத்துள்ளது. வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில்,

மருத்துவபீட மாணவி கி.புஷ்பமாலா தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தா பேராசிரியர் சு.மோகனதாஸ் பத்திரிகைகளில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார். வெள்ளிக் கிழமை மாலை மேற்படி மாணவி துணைவேந்தருக் குத் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தார். இருப்பினும் இப்பிரச்சினை தொடர்பாக எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை.

இந்நிலையில் இப்பிரச்சினை தொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்குள்ள பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு மாணவி கி.புஷ்பமாலாவின் ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு மதிப்பளிக் கும் வகையிலும் நேற்றுக் காலை 8.00 மணியளவில் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் மாணவி கி.புஷப மாலாவிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் ஏற்பாடு செய் யப்பட்டது.

இச்சந்திப்பில், யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் சர்வதேச தழிழீழ மாணவர் பேரவை சார்பாக கண்ணன்,குகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் இருதரப்பினருக்கும் இடையே ஒரு சுமுகமான முடிவு எட்டப்பட்டதைத் தொடர்ந்து நேற்றைய தினம் காலை 9.00 மணியளவில் மாணவி கி.புஷ்பமாலா தனது போராட்டத்தை கைவிட்டுச் சென்றுள்ளார் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (ற)

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு - குறள்

வலம்புரி

# அமெரிக்கப் பிரஜைகள் யாழ்ப்பாணத்திலா?

யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை சந்திப்பதற்காக அமெரிக்க அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

மேற்படி அறிவித்தல் பத்திரிகை வாயிலாக வெளிவந்தபோது அதனால் யாழ்ப்பாண மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் அமெரிக்கப் பிரஜைகள் இருக்கிறார்களா? என்பதே அவர்களின் அதிர்ச்சிக்கான காரணமாகும்.

அமெரிக்க தூதரகம் வெளியிட்ட அறிவிப்பின் பிரகாரம், அமெரிக்கப் பிரஜைகள் பலர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதுபோலவும் அவர்களை ஒட்டு மொத்தமாக சந்திப்பதற்காகவும் யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்கு அமெரிக்க அதிகாரிகளை சந்திப்பதற்கான சந்தர்பத்தை வழங்கும் நோக்குடனும் மேற்படி ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது.

எனினும் அமெரிக்க அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை சந்திப்பதாக வெளியிட்ட அறிவிப்பு யாழ்ப்பாண மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியமை நியாயமானதே.

யாழ்ப்பாண மக்களின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியம், உறவுமுறை என்பவற்றை அறிந்த எவருமே அமெரிக்காவின் அறிவிப்பை அதிர்ச்சியுடனேயே நோக்குவர். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் எந்த ஓர் இனத்தவர் வருகை தந்தாலும் அவர் உடனடியாக இனங்காணப்படுவார்.

அவ்வாறு அமெரிக்கப் பிரஜைகள் யாழ்ப்பாணத்தில் இருப்பதாக இருந்தால் அது யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச பொது அமைப்புகளில் பணியாற்றுபவர்களாகவே இருக்கமுடியும்.

இருந்தும் அங்குகூட மிகவும் சொற்பமானவர்களே இருக்கமுடியும். அல்லது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த எவருமே யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச பொது அமைப்புகளில் பணியாற்றவில்லை என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை அமெரிக்க உயர் அதிகாரிகள் சந்திக்க வருவது விசித்திரமானதே.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பொது அமைப்புக்களில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை சந்திப்பதாயின் அதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் செய்யவேண்டிய தேவை ஏற்படாது. அவர்களைக் கொழும்பிலோ அன்றி அமெரிக்காவிற்கு வரவழைத்தோ அங்கு சந்தித்திருக்கமுடியும்.

இதற்கு மாறாக யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை சந்திப்பதற்காக அமெரிக்க அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதானது தமிழ் மக்களிடையே பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்திவிடக்கூடியதாகும்.

ஏற்கனவே ஈழத் தமிழர்களின் விடயத்தில் அமெரிக்கா கையாண்ட முறைகள், நடவடிக்கைகள் அமெரிக்கா மீதான நம்பிக்கையில் எதிர் விளைவை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கு மேலாக இலங்கைப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைக் காண்பதில் அரசு காலம் கடத்தி வருகின்ற வேளையில் இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணுமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்காத அமெரிக்கா, இலங்கைப் படைகளுக்கு ஆயுதப் பயிற்சிகளையும், யுத்தக் கப்பல்களையும் வழங்கி வருவது தமிழ் மக்களுக்கு ஆத்திரத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளைச் சந்திப்பதற்காக அந்நாட்டு அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற செய்தியானது அமெரிக்கா மீதான சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதுடன் அந்நாடு தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுகின்றதென்ற ஊகங்களையும் உறுதிபடுத்துவதாக உள்ளது.

# பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து ஆராய ஜனாதிபதி- ரணில் மீண்டும் சந்திப்பு



(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பது குறித்து விரிவாக ஆராய்வதற்காக இவ்வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்குமாறு சர்வதேச நாடுகளும், சர்வதேச பொது அமைப்புக்கள் பலவும் இலங்கை அரசாங்கத்தையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் வலியுறுத்திவரும் நிலையில் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்த நிலைப்பாடுகளை ஆராயும் பொருட்டு கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியும், ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேச்சு நடாத்தியிருந்தனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று காலை நியூயோர்க் பயணமாகியுள்ள ஜனாதிபதி, அக் கூட்டத் தொடரை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் உள்ளிட்ட ஏனைய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலரையும் சந்தித்து விரிவாக ஆராய்ந்திருந்தனர்.

இதனடிப்படையில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும், இதற்கு முன்னோடியாகவே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில், பல்வேறு கருத்து முரண்பாடுகள் நிலவிவருகின்றன.



இதனால் மக்கள் விடுதலை முன்னணியை உதறிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைவதற்கு முயற்சிகள் இடம்பெற்றதாகவும் எனினும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு உடன்பட மறுத்ததாகவும் தென்னிலங்கை அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட் டிருக்கும் நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# எரிக் சொல்ஹெய்ம் நோர்வே திரும்பினார்

(கொழும்பு)

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் இரவு நோர்வே திரும்பியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த வழிமுறைகள் தொடர்பாக அரச தலைவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும் இது விடயம் குறித்துக் கலந்துரையாடி இருந்தார். எனினும் சாதகமான முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் இவர் நேற்று முன்தினம் இரவு நோர்வே திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# துணைப்படைகளுடன் இணைந்து செயற்படுவதை இராணுவம் நிறுத்திக்கொள்ள வேண்டும்

## எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை இராணுவம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் துணைப் படைகளுடன் இணைந்து செயல்படுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கருத்து வெளியிட்டுள்ளார்.



நேற்று முன்தினம் மாலை கொழும்பிலுள்ள நோர்வே தூதராலயத்தில் இடம்பெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றின்போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை நீக்க இரு தரப்பு நட வடிக்கைகளும் குறைவாகவே உள்ளன.

இதன் காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக சிறிதளவு நம்பிக்கையே தற்போது தமக்கு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை இலங்கைக்கான விஜயத்தின்போது ஜே.வி. பி.யினரை சந்திப்பதற்கு தான் முயற்சி எடுத்தபோதிலும் அது சாத்தியப்படவில்லை என தனது கவலையை வெளியிட்ட அவர், ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது தொடர்பாக கடும்போக்கைக் கடைப்பிடிப்பதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். (ற)

# 40,000 கிரிமினல்கள் நாட்டில் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள்

(கொழும்பு)

கைவிரல்ரேகைப் பதிவுகள் வைக்கும் திணைக்களத்தில் கணனி வசதிகள் இன்மையால் 40 ஆயிரம் வரையான கிரிமினல்கள் நாட்டில் சுதந்திரமாக நடமாடுகிறார்கள் என்று திணைக்களத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளாகக் குற்றங்கள் நடைபெற்ற இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கைவிரல் ரேகை அடையாளங்கள் பரிசோதிக்கப்படாமலே இருக்கின்றன எனத்தெரிவித்த பதிவாளர் அபேரத்ன நாடெங்கிலுமுள்ள நீதிமன்றங்களிலிருந்து இக்காலப்பகுதியில் 4 இலட்சம் வரையிலான விரல்ரேகைகள் தமக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் எரிக் பஸ்நாயக்க முன்னிலையில் பதிவாளர் இவற்றை தெரிவித்தார்.

17 மோசடி வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டு 2046ஆம் ஆண்டுவரைக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் விடயத்தில் சுத்தமான ஒரு அறிக்கையை பதிவாளரால் எவ்வாறு தரமுடிந்தது என்று நீதியரசர் கேட்ட கேள்விக்கு பதிலளித்தபோது பதிவாளர் மேற்கண்ட விபரங்களை தெரிவித்தார். குற்றச்செயல்களை தடுப்பதற்கு முக்கிய பங்காற்ற வேண்டிய ஒரு திணைக்களம் கணனி வசதிகளின்றி செயற்படுவது அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது என்று நீதியரசர் பஸ்நாயக்க தெரிவித்தார்.

குற்றமற்றவர் எனக்காட்டும் கைவிரல் ரேகை அடையாள அறிக்கையை சமர்ப்பித்ததற்காக பதிவாளர் நீதி மன்றத்தில் மன்னிப்புக்கோரினார்.

# காலி மாவட்டத்தில் சர்வதேச விமான நிலையம்

சர்வதேச விமான நிலையம் ஒன்றை தென்னிலங்கையில் நிர்மாணிப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

காலி மாவட்டத்தில் ஹபராதுவை மத்தேகொட எனும் இடத்திலேயே இந்தச் சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்றவகையில் 90 ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான மங்கள சமரவீர இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மக்களின் எண்ணிக்கையோ, செல்வமோ, வறுமையோ முக்கியமல்ல. சொல், செயல் சிந்தனைகளால் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டிவைக்கமுடியும். இந்த உண்மையை எப்போதும் மறந்துவிடாதீர்கள்.

சுவாமி விவேகானந்தர்

# அரசாங்க சேவையில் விடுமுறை நாட்களைக் குறைக்கவேண்டும்

## அமைச்சர் தொடங்கொட தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் விடுமுறை நாட்கள் ஒரு வருடத்தில் மூன்றில் ஒரு பகுதியாக உள்ளது. இதனால் நாட்டினை அபிவிருத்தி செய்வதில் அரசு பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மதங்களுக்கான முக்கிய தினங்கள் தொடர்பாக 21 தினங்கள் விடுமுறை தினங்களாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றன.

இவை தவிர சனி, ஞாயிறு மற்றும் ஏனைய விடுமுறை நாட்களை கணக்கில் கொள்ளும் போது வேறு எந்த நாட்டிலும் இல்லாத அதிகளவு விடுமுறை தினங்கள் இலங்கையில் உள்ளன.

இதனைக் குறைப்பதன் மூலமே அரச அதிகாரிகளால் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கமுடியும். இதேவேளை விடுமுறையைக் குறைப்பது சம்பந்தமாகவும், போயா விடுமுறையை இல்லாமல் செய்வதற்காகவோ இதுவரை பாராளுமன்றத்திலேயோ அல்லது அமைச்சரவையிலோயோ எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பதிலாக மக்கள் விவாதத்திற்காக இவை முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் தொடங்கொட மேலும் தெரிவித்தார். (க)

## புலனாய்வுத்துறையை...

யோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி ஏற்கனவே தாக்குதல்களை மேற்கொண்டு வந்த இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் 'மிலேனியம் சிற்றி' புலனாய்வுப் பிரிவு அணி முற்றாகச் செயலிழந்துவிட்டது.

மேலும் கருணா விவகாரத்தின் தொடர்ச்சியாக இராணுவப் புலனாய்வாளர்கள் சுட்டுக்கொல்லப்படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இந் நிலையில் செயலிழந்து கொண்டிருக்கும் இராணுவப் புலனாய்வுத் துறையை மீளக் கட்டியெழுப்ப தனித்தனியே இயங்கி வரும் இராணுவப் பொலிஸ் புலனாய்வு பிரிவுகளை ஒருங்கிணைத்து தகவல்களைப் பெறவும், புலனாய்வுத்துறையின் செயற்றிறனை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. புலனாய்வுத் துறையை செயற்றிறனாக மாற்றுவதன் மூலமே தென்பகுதியில் இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களை கட்டுப்படுத்தமுடியும் என அரசாங்கத்திற்கு பாதுகாப்புத் தரப்பிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-08)

## ஈ.பி.டி.பி...

இதேவேளை பிரஸ்தாப நபர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி சார்பாக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டவர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் ஈ.பி.டி.பி அமைப்பின் தெல்லிப்பழை அலுவலகத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்றியவர் என்றும், கடந்த 4 நாட்களுக்கு முன்னரே விடுமுறையில் புத்தளம் சென்றவர் என்றும் தெரியவருகிறது. (க-15)

## செயலமர்வு

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.சற்) உதவியுடன் தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பான செயலமர்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடகம் பிற்பகல் 3 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இச் செயலமர்வில் அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்குவேண்டிய வேலை திட்டங்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டு தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள சகல திணைக்ளப் தலைவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசன் கடிதம் மூலம் கோரியுள்ளார். (க-47)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியினைப் பூர்த்திசெய்து வெளியேறிய 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் அணி மாணவர்களது தகைமை விபரங்கள் இறுதியாக ஆவணப்பட்டியலில் சேர்க்கப்படவிருப்பதாலும், மாகாண ஆளுநரைச் சந்திப்பது தொடர்பாகக் கலந்துரையாட இருப்பதாலும் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் கே.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## நூல் வெளியீடு

(பொன்னாலை)

'திருக்குமரன் கவிதைகள்' வெளியீட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மணி மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், மதிப்பீட்டு உரைகளை செ.யோகநாதன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். (த-49)

## எதியோப்பியா...

யும், மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கி வெறுமனே ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடனேயே செயற்பட்டுவந்தன.

இதன் ஒரு அங்கமாகவே பல்வேறு விடயங்களை உள்ளடக்கி தந்திரோபாயமான முறையில் தேர்தல் வாக்குறுதிகளை கூட்டமைப்பு பொதுமக்களுக்கு வழங்கியது. அவற்றை நம்பி பொதுமக்கள் அளித்த வாக்குகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடந்த 4 மாத காலத்தில் எதுவித உருப்படியான தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை.

அத்துடன் தற்போது மக்களின் வாழ்க்கைச் செலவு 10.5 சதவீதத்தால் உயர்ந்துள்ளதுடன், பணவீக்கமும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் கூட்டமைப்பு அரசாங்கம் நாட்டை எதியோப்பியாவின் நிலைக்கு இட்டுச் செல்லவே முயன்றுகொண்டிருக்கிறது எனவும் பந்துல குணவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார். (ற)

## ஐக்கிய...

ரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போயுள்ளனர்.

தேர்தல் நடைபெறும்போது தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கவேண்டும் என்று கூறும் ஜே.வி.வி கடந்தகால வன்முறைகளின்போது தெற்கில் அவர்களினால் அபகரிக்கப்பட்ட அடையாள அட்டையை பெற்றுக்கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனவும் ஜெயலத் மேலும் தெரிவித்தார். (இ-08)

# இலங்கையின் அபிவிருத்திக்கு உதவி வழங்க ஒபெக் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதியுதவியை வழங்குவதற்கு 'ஒபெக்' அமைப்பு முன்வந்துள்ளது.

இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக இந்த நிதியுதவியை ஒபெக் அமைப்பு வழங்க இண்க்கம் தெரிவித்துள்ள அதேநேரம், நேரடியாக இலங்கைக்கு நிதியுதவியை வழங்கவும் இவ் அமைப்பு ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகிறது.

மற்றும் ஈரான், சவுதிஅரேபியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்த எரிபொருட்களுக்கான கட்டணங்களை திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கை அரசினால் கோரப்பட்டிருந்த ஒரு வருடகால அவகாசம் குறித்து இவ் ஒபெக் அமைப்பு ஆராய்ந்து வருகிறது. (ற)

## புலிகள்...

சில் அதிகாரி தெரிவிக்கையில்,

நாம் இதுபற்றி கண்காணிப்புக் குழுவின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு பலதடவை அறிவித்திருந்தோம். ஆனால் அதற்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. இன்னமும் திருகோணமலைத் துறைமுகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே உள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின் விடுதலைப் புலிகள் சம்பூர் கடற்கரையில் பதுங்குகுழிகளை அமைத்துள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களின்படி இம் முகாம்களில் பெருமளவு நவீனரக ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன என்றும் அந் அதிகாரி தெரிவித்துள்ளார். (06)

## பொலிஸ்மா...

பிரச்சினைகள் குறித்து இச் சந்திப்பில் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடப்பட்டது.

மன்னார் மாவட்டத்திற்கு தனியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும். தமிழ்பேசும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும் எனவும் பொலிஸ்மா அதிபரிடம் ஆயர் வேண்டுகோள் விடுத்தார். (த-08)

## சமாதானப் பேச்சை...

சொல்ஹெய்மை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்துப் பேசிய பின்னர் வெளியிட்ட அறிக்கையில், விடுதலைப் புலிகள் பேச்சுக்குவரத் தாமதம்காட்டுவதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. அந்த அறிக்கை எமக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உண்மை ஒருபுறம் இருக்க அதனை மூடிமறைத்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கை எமக்குப் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாதானத்தையும், நீதியையும் நேசித்த மக்கள் மத்தியிலே குழப்பங்களையும் நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்தி சமாதானச் சூழலை சீர்குலைக்கும் வகையில் தெற்கிலே சில தீய சக்திகள் செயற்பட்டுவருகின்றன.

அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் எப்போதும் போரில வந்துபங்குகொள்ளப்போவதில்லை. மாறாக சாதாரண அப்பாவி மக்களைத்தான் ஏவிவிடுவார்கள்.

சமாதானச் சூழலை சீர்குலைத்து போரை நோக்கி பிரச்சாரத்தை முன்னெடுக்கின்ற சக்திகளுக்கு சரியான பாடத்தினை கற்பிக்கவேண்டும். இதற்கு சாதாரண மக்களைத்தான் பலிகொடுக்க முனைகின்றனர் என்ற உண்மைநிலையை எடுத்துக் கூறவேண்டும் என்று தெரிவித்த அரசியல்துறைப் பொறுப்பாளர்,

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் உண்மையான ஒரு சமாதானத்தைத்தான் நேசிக்கின்றார்கள். இந்த உண்மையை தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

இந்த சக்திகளால் தென்னிலங்கையிலே தவறான கருத்துக்களும், தவறான பிரசாரங்களும் இடம்பெற்று வருகின்றன. இதனை இட்டு நாம் வேதனை அடைகின்றோம் என்றும் கூறினார். (இ-08)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவரும், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளருமாகிய திரு. சி.குமரவேல் அவர்களின் துணைவியார்,

### திருமதி திலகவதி குமரவேல்

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய
வங்கிகளின் சமாசம். (C/528)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
17.04.1953



மறைவு
18.09.2004

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரும், சங்கத்தலைவர் திரு. சி. குமரவேல் அவர்களின் பாசமிகு மனைவியுமாகிய

### திருமதி திலகவதி குமரவேல்

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்*

(C/527)

## கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரின் அறிவித்தல்

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக எமது கல்லூரி மூலம் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் 20.09.2004 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. 2004 ஏப்ரலில் நடைபெற்ற பரீட்சையில் முதற்தடவை தோற்றியவர்கள் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

பொ.கமலநாதன்
அதிபர் (C/529)

## நீடிக்கப்பட்டுள்ளது

வெண்புறா
WHITE PEGION

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் நடாத்தும்
கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான

### கட்டுரை, சித்திரப் போட்டிகள்

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் நடாத்தும் கட்டுரை, சித்திரப்போட்டிகளின் இறுதிநாள் 30.09.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை ஆர்வலர்களுக்கு அறியத் தருகின்றோம்.

போட்டிகள் பற்றிய முழு விபரங்கள் நமது ஈழநாடு 15.08.2004 இலும், 16.08.2004 உதயன் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,**
இல.63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தொ.பே. இல. 222 5932

(8826)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.